விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 29 சனிக்கிழமை (14.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 'சரத் பொன்சேகா குற்றவாளி'

# இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

## ஜெனரல் அந்தஸ்தை நீக்கவும் பணிப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா குற்றவாளி என இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவரின் ஜெனரல் அந்தஸ்து நீக்கப்படவேண்டும் என்றும் இத்தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தை பெறவேண்டும் என்றும் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ சேவையிலிருந்து கொண்டு அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக நேற்று நடைபெற்ற முதலாவது இராணுவ நீதிமன்ற விசாரணையின் போதே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை நீடிக்க சந்தர்ப்பம் உள்ளது

### ஐரோ. ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி. வரிச்சலுகைத்திட்டத்தை நீடித்துக்கொள்வதற்கு இலங்கைக்கு இன்னமும் சந்தர்ப்பம் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைத்திட்டம் நாளையுடன் இடைநிறுத்தப்பட (16ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் உரியமுறையில் பராமரிக்கப்படவில்லை

### த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரி சாட்சியம்


(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் உரியமுறையில் பராமரிக்கப்படவில்லை என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவிடம் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மூன்றாம் நாள் அமர்வில் சாட்சியமளிக்கையிலே அவர் இதனைக் கூறியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் தற்போது உயிருடன் இல்லை எனினும் விடுதலைப் புலி போராளிகள் யுத்தம் நிறைவடைந்தும் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு சாதாரண மக்கள் போல் வாழ்வதற்கும் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் விடுதலைப் (16ஆம் பக்கம் பார்க்க)



## டெங்கு நோயினால் 186 பேர் பலி

(கொழும்பு)

கடந்த ஜனவரி முதல் நேற்றுமுன்தினம் வரை டெங்கு நோயினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 186 ஆக உயர்ந்துள்ளது. அத்துடன் 25 ஆயிரத்து 341 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு,கம்பஹா,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்னை நீதிமன்றில் மனுத்தாக்கல்

(சென்னை)

தேடப்படுவோர் பட்டியலிலிருந்து தன்னை நீக்கக்கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

ராஜா என்ற வழக்கறிஞர் மூலம் டக்ளஸ் தேவானந்தா சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதில் இந்தியா–இலங்கை ஒப்பந்தப்படி என்னை விடுதலை செய்தனர். என்மீதான குற்றச்சாட்டுக்களும் விடுவிக்கப்பட்டன. எனவேதான் நான் கொழும்பு திரும்பிச்சென்றேன்.

தற்போது நீதிமன்றில் என்மீதான நிலுவையிலுள்ள விசாரணைகளை சட்டப்படி சந்திக்கத்தயாராக (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனவர்களுக்கு ஒருவருடத்துள் மரணச் சான்றிதழ்

### சட்டமூலம் விரைவில் சமர்பிக்கப்படும்

(கொழும்பு)

காணாமல்போன நபர்களுக்காக ஒரு வருடத்திற்குள் மரண அத்தாட்சிப் பத்திரத்தை வழங்க வழிசெய்யும் யோசனைகள் அடங்கிய சட்டமூலம் எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என பிரதி பதிவாளர் நாயகம் சதாவர் அய்யர் தெரிவித்துள்ளார். நபர் ஒருவர் காணாமல் போய் ஒரு வருடம் பூர்த்தியாகியிருக்குமாயின் இறந்து விட்டதற்கான அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் யோசனை இந்த சட்டமூலத்தினூடாகவும் முன்மொழியப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்.வெளியுறவு அமைச்சர் விரைவில் இலங்கை வருவார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வெகுவிரைவில் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைவரும் அவர் அரச உயர்மட்டத்தினரை சந்தித்து தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றமை மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்வு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட பல அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இத்தகவலை இந்திய நாடாளுமன்றில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார். (ச-5)

## ஐ.நா. சபையுடன் இணங்கிச் செல்ல இலங்கை அரசு இரகசிய நடவடிக்கை!

### உறவை வலுப்படுத்தவும் திட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தாம் இழந்த ஐக்கியநாடுகள் சபையின் நன்மதிப்பை பெறுவதற்கு பல்வேறு இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூன் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பில் புதிய நிபுணர்கள் குழு ஒன்றை நியமித்ததைத் தொடர்ந்து இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட ஆரம்பித்தது.

இந்த நிபுணர்கள் குழுவை எதிர்த்து இலங்கையின் அமைச்சர் விமல் வீரவன்ச நேரடி உண்ணாவிரதத்தை மேற்கொண்டதும் அதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் ஆதரவளித்தும் ஐக்கிய நாடுகளின் பொது செயலாளருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது. இதனை அடுத்தே தாம் நியமித்த நிபுணர்கள் குழுவில் மேலும் எட்டு உப அதிகாரிகளை நியமித்து பான் கீ மூன் அதனை வலுப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்த அரசாங்கம் நிபுணர்கள் குழுவுக்கு எதிரான தமது நேரடி நடவடிக்கைகளை நிறுத்திக் (16ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை வங்கியின் 71வது அகவையை முன்னிட்டு இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் மு.பாலசிங்கம் உரையாற்றுவதையும் அருட்தந்தை கே.நிருபன் நிசாந்தன் மற்றும் வங்கி முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் 18+ சேமிப்புக் கணக்கில் தங்கநாணயம் வென்ற வைப்பாளர்களுடன் முகாமையாளர் மற்றும் சிறிபதி, நிர்வாக உத்தியோகத்தர் என்.கணேசநாதன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ரோலர்கள்

(யாழ்ப்பாணம்)

ஆயிரக்கணக்கான இந்திய ரோலர் மீன்பிடி படகுகள் காங்கேசன்துறையிலிருந்து நாகர் கோயில், மன்னார் கடற்பரப்பில் கடந்த 4 நாட்களாக மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக வடமராட்சி மீனவர் சங்கத்தின் ஒன்றியம் தெரிவித் துள்ளது.

உள்ளூர் மீனவர்கள் ரோலர் படகுகளில் மீன்பிடிக்க தடை விதித்துள்ள இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பதாகவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பில் மீன்பிடித்து வரும் நிலையில் கடற்படையினர் தென்பகுதியை சேர்ந்த சிங்கள மீனவர்கள் வடக்கில் மீன்பிடியில் ஈடுபட ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

உள்ளூர்மீனவர்களின் வலைகள் மற்றும்மீன்பிடிஉபகரணங்கள்ரோலர் படகுகளினால் சேதமாக்கப்படுவதாகவும் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை நேற்றுமுன்தினம் இரவு ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதை காணமுடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# முன்பள்ளி விளையாட்டுவிழா

(சுன்னாகம்)

ஏழாலை வடக்கு கிழக்கு சனசமூக நிலையத்துடன் இணைந்த திவ்யா முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி அயல் மைதானத்தில் இ.யோன். துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை வடக்கு சைவ மகாஜன வித்தியாலய அதிபர் ந.சுப்பிரமணியம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-4)

# ரணிலின் தாயாரை ஜனாதிபதி பார்வையிட்டார்

(கொழும்பு)

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தாயாரை ஜனாதிபதி மஹிந்த நேற்று பார்வையிட்டார். நோய்வாய்ப்பட்டிருக்கும் திருமதி நளினிவிக்கிரமசிங்க கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார். இந் நிலையில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, திருமதி நளினி விக்கிரமசிங்க குணமடைய வேண்டுமென வாழ்த்து தெரிவித்தார்.

ஜனாதிபதி வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும்போது எதிர்க்கட்சித் தலைவர்ரணில்விக்கிரமசிங்க அங்கு இருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ச-3)

# பரீட்சை நிலையத்தில் கைத்தொலைபேசி


(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிலையத்தில் மாணவர்கள் இருவர் செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்திவருவதாக பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையிலுள்ள பரீட்சை நிலையமொன்றிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இம்மாணவர்கள் பரீட்சையில் மோசடி செய்வதற்காக இத்தொலைபேசிகளை பயன்படுத்தினார்களா என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. இம்மாணவர்கள் தமது பரீட்சைகளைப் பூர்த்தி செய்தவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)






## போய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

கே.ரவிக்குமார் சாஸ்திரி

0770790898

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

குறைந்த செலவில் கூறுவார்

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம்,திருமணயோகம், குழந்தைப்பாக்கியம்,கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேட பயணம்,எதிரிகள் கண் திருஸ்டி,கஷ்ட நஷ்டங்கள்,கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம்,பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல்.

இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

திலக் லொச் அறை இல: 01

711,K.K.S.வீதி,யாழ்ப்பாணம்(யாழ்.இந்துக் கல்லூரி சந்தி)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை (2168)



## விற்பனைக்கு

NPGS NP9119 நல்ல நிலையிலுள்ள சாளி, 2Kg உழுந்து அரைக்கும் கிறைண்டர், கம்பர் சைக்கிள், ஜப்பான் செற், பிராமணர்கள் வசிப்பதற்கு உகந்த வீடு என்பன விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் மாலையில் 3-4 மணிக்கிடையில் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு : விஜயகுமார்
இல. 40, கடைச்சாமி லேன்,
நீராவியடி, யாழ்ப்பாணம். (2170)



13.08.2010 முதல்




செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00



## வேலை வாய்ப்பு

கோப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட innovage கிளை நிறுவனத்திற்கு (Marketing Management, Peoples Management, Business Management ஆகிய துறைகளுக்கு பயிற்சியாளர்கள் தேவை. ஏனைய விபரங்கள் நேரில். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
0214922177
0775566224 (2162)



## உடன் தேவை

இல.300 பிரதான வீதியில் இயங்கிவரும் JS Graphics நிலையத்திற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை

* கணனி தமிழ் தட்டச்சு தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
* தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :-0777446973 (2161)


## மாநகரசபை யாழ்ப்பாணம்

### நல்லூர் உற்சவம் தொடர்பான விசேட ஏற்பாடுகளும் தீர்மானங்களும்

01. ஆலய சூழலில் வதிவோரது வாகனங்கள் யாவும் பின்வரும் வீதிகள்ஊடாக வெளிச்செல்வதற்கு விசேட அனுமதி அட்டைகள் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும்.

அ) இரண்டாம்கட்டை பருத்தித்துறை வீதி சந்தி.
ஆ) சங்கிலியன் வீதி கோவில் வீதி சந்தி.
இ செட்டித்தெரு ஒழுங்கை செட்டித்தெரு சந்தி.
ஈ) பிராமணக்கட்டு ஒழுங்கை கோவில் வீதி சந்தி.
உ) அரசடிச்சந்தி.
ஊ) ஆலயத் தொண்டர்களுக்கு (சகல வீதி தடைகள் ஊடாக)
எ) ஊடகவியலாளர்கள் (பிராமணக்கட்டு ஒழுங்கை கோவில் வீதி சந்தி )
ஏ) வீதித் தடைகளுக்கு உட்பட்ட வர்த்தகர்களுக்கு (அரசடி சந்தி)
ஐ) கலைஞர்களுக்கு (சங்கிலியன் வீதி கோவில் வீதி சந்தி)

01. உற்சவ காலத்தில் ஆலய சூழலில் எதிர்நோக்கப்படும் குறைபாடுகள் பற்றி உடனுக்குடன் எமக்கு அறியத்தருவதற்கு வசதியாக 021-222-8888 இலக்க தொலைபேசி 24 மணி நேரமும் செயற்படவுள்ளது.
02. ஆலய உற்சவத்திற்கு வருகைதரும் முக்கிய பிரமுகர்களது வாகனங்கள் யாவும் பருத்தித்துறை வீதி நல்லூரில் உள்ள வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளில் நிறுத்தப்படலாம்.
03. ஆலய உற்சவத்திற்காக வருகைதரும் அடியார்களது பாதணிகள் யாவும் ஆலயத்திற்கு மிக அண்மையிலுள்ள வீதித்தடைகளில் வைத்து பாதுகாக்கப்படும் இதற்காக 5 ரூபாய் அறவிடப்படும்.
04. அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளாத மாநகரசபை பணியாளர்கள் எவரும் வீதித்தடைகள் ஊடாக தமது வாகனங்களில் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
05. பக்தர்கள் அங்கப்பிரதட்சனை செய்யும் வேளையிலும் கந்தன் வீதியுலா வரும் சமயத்திலும் காவடி, தூக்குக்காவடி என்பன ஆலய வீதிகளில் பிரவேசிப்பதைத் தவிர்த்தல் ஆரோக்கியமானதாகும்.
06. ஆசார சீலர்களாக அடியார்கள் அனைவரும் வருகைதந்து ஆலய உற்சவம் பக்திபூர்வமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம். (இ)

யாழ் மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

இல.183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TEL: 0212223814
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும், 2010ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும், 2008/2009ம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலும், 29.08.2010 அன்று முற்பகல் 11 மணிக்கு தலைவர் திரு.மா.நாகலிங்கம் அவர்கள் தலைமையில் சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய கூட்டத்தில் ஏதேனும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 25.08.2010 அன்று 12.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது கடிதமூலமோ சங்க அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்

* குறித்த நேரத்திற்கு கூட்டம் ஆரம்பமாகும் என்பதால் அங்கத்தவர் அனைவரும் குறித்த நேரத்தில் சமுகம் தரவும்.

நெறியாளர் குழு கட்டளைப்படி
த.தவறஞ்சன்,
செயலாளர்.

(C-859)

# இன்று ஒரு தகவல்

## மனமும் நிறைவும்

ஒரு ஆள் இருந்தான் நிறையப் பணம் சம்பாதித்ததான் ஆனால் செலவு செய்வதற்கு மனம் வராமல் சேர்த்த பணம் முழுவதையும் ஒரு மரத்தடியில் புதைத்து வைத்திருந்தான்.

வாரத்துக்கு ஒருதடவை அந்த மரத்தடிக்கு வந்து புதைத்த இடத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பான். அதன் பின் போய்விடுவான். ஒரு நாள் ஒரு திருடன் வந்தான். அவன் புதைத்து வைத்திருந்ததையெல்லாம் எடுத்து கொண்டு போய் விட்டான். இந்த விடயம் தெரிந்து விட்டது.

அந்தக் கருமி புலம்ப ஆரம்பித்தான்.

இவனுடைய புலம்பலைக் கேட்டதும் அக்கம் பக்கத்திலுள்ள சனங்கள் ஓடி வந்து என்ன விஷயம்? என்று விசாரித்தார்கள். இவன் எல்லாவற்றையும் கூறினான் ஒரு பெரியவர் கேட்டார்:

"ஏனப்பா... வாராவாரம் வந்து இந்த இடத்தைப் பார்ப்பதாகச் சொன்னாயே... எப்பொழுதாவது இதிலிருக்கும் பணத்தை எடுத்து செலவு செய்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

"நான் அவ்வப்போது வந்து அதைப் பார்ப்பது தான் வழக்கம் அதைத் தொட்டதேயில்லை" என்றான். "அப்படியானால் இப்பொழுதும் நீ வாராவாரம் வந்து இந்த இடத்தைப் பார்த்துவிட்டுப் போகலாமே" என்றார் அந்தப் பெரியார்.

அதுவும் சரிதானே!

எவ்வளவு காலமானாலும் அவன் அந்தப் பணத்தை எடுத்து செலவு செய்யப் போவதில்லை. அப்படியிருக்கும் போது உள்ளே பணமிருந்தாலும் ஒன்னுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

இதிலிருந்து என்ன புரிகிறது என்றால்... ஒருத்தரிடம் இருக்கும் பணத்தை கொண்டு அவர் ஏழையா பணக்காரரா என்று முடிவு செய்வது சரியில்லை அந்தச் செல்வத்தை அனுபவிக்கும் திறன், பயன்படுத்தும் திறன் ஆகியவற்றை வைத்துத்தான் அவர் ஏழையா பணக்காரரா என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். அது தான் சரி.

செலவு செய்யத் தெரியாதவன் சேகரம் பண்ணிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்?

தலைமுடியே இல்லாதவன் தாராளமாக சீப்புக்களை வாங்கிச் சேகரிப்பது போன்று தான் இதுவும். சில சமயம் செலவு செய்ய நாம் தயாராக இருந்தாலும் அந்தச் செல்வம் நமக்குப் பயன்படுவதில்லை. அரேபியாவில் ஒரு நகை வியாபாரி இருந்தார். அவர் விலையுயர்ந்த முத்துக்களையெல்லாம் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு சமயம் பாலைவனம் வழியாக ஒட்டகத்தில் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது கடுமையான புயல் வீச ஆரம்பித்தது.

திசைதவறி இவர் எங்கேயோ வந்துவிட்டார். கூட வந்தவர்களையெல்லாம் காணவில்லை எங்கே போனார்களோ தெரியவில்லை.

இவர் மிகவும் பயந்து அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். வழி தெரியவில்லை. கடுமையான பசி வாட்டியது.

ஒட்டகத்தின் முதுகில் ஒரு மூட்டை இருந்தது. அதை பிரித்துப் பார்த்தார்கள். உள்ளே ஏதாவது இருக்கிறதா என்று தேடிப் பார்த்தார். அது வரைக்கும் கண்ணில் தட்டுப்படாத அபூர்வமான ஒரு பை கண்ணில் பட்டது. ஆகா அதில் ஏதாவது சாப்பிடுவதற்கு இருக்கும் என்று நினைத்து ஆவலாக அதைப் பிரித்துப் பார்த்தார்.

அந்தப் பையில் விலையுயர்ந்த முத்துக்கள் இருந்ததாம்.

அப்பொழுது தான், விலையுயர்ந்த முத்துக்கள் கூட சாப்பிடுவதற்கு உணவாக முடியாதென்பதை அவர் புரிந்து கொண்டாராம். எந்த நேரத்தில் எது நமக்குத் தேவையோ அது நமக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும்.

அப்படி அது கிடைப்பதற்கு நம்மிட முள்ள செல்வம் பயன்பட வேண்டும்.

அது நமக்கும் பயன்படலாம். நம் மூலமாக மற்றவர்களுக்குப் பயன்படலாம்.

அது தான் செல்வத்தின் பயன்.

ஒரு மரத்தடியில் ஒருத்தன் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான்.

அந்தப் பக்கமாக வந்த இன்னொருத்தன்,

"ஏனப்பா அழுது கொண்டிருக்கிறாய்?" என்றான்

"இந்த இடத்தில் தான் பூமிக்கடியில் பணம் இருக்கிறது. புதைத்த இடம் தெரியவில்லை அது தான் அழுகிறேன்" என்றான்.

"நல்லா ஞாபகப்படுத்திப்பார். எந்த இடத்தில் புதைத்தாய்?" என்று கேட்டான் அவன்.

"அது எப்படி எனக்குத் தெரியும் ... புதைத்து வைத்திருப்பவன் நானில்லையே. எனது எதிர்வீட்டுக்காரர்" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.தொழிநுட்பவியல் கல்லூரியில் தேசிய தொழில் தகைமை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் நடைபெறவுள்ள 3 மாத தேசிய தொழில்தகைமை தரத்திலான NVQ விசேட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் திருத்துதல், வீட்டு மின்சார பாவனைப் பொருட்கள் திருத்துதல் , வானொலி மற்றும் தொலைக்காட்சி உபகரணங்கள் திருத்துதல் , கணனி பிரயோக உதவியாளர் , வாயு மற்றும் வில் பற்றாசு பிடித்தல் போன்ற பயிற்சி நெறிகளுக்கும் குழாய் இணைப்பு , மரவேலை , மேசன் ஆகிய கட்டுமான பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தரம் 10 இல் சித்தியடைந்திருப்பதுடன் 01.09.2010 ஆம் திகதியில் 17 வயதை பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் இப்பயிற்சி நெறியின் போது நாளாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு, பிரயாணத்திற்கான பருவ கால சீட்டு, சீருடை என்பன வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பிக்க விரும்புவோர் தாம் பயில விரும்பும் பயிற்சி நெறியின் பெயரைக் குறிப்பிட்டு பணிப்பாளர் , தொழில்நுட்பவியல் கல்லூரி , த.பெ.இல.04, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மேலதிக பணிப்பாளர் வி.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

(6-4)

# வடக்கில் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு ஓய்வூதியத்திட்டம்

## சமூக பாதுகாப்பு சபை தீர்மானம்

(கொழும்பு)

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வரும் மக்களுக்காக ஓய்வூதியத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க சமூக பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

இதற்காக சமூக பாதுகாப்புச் சபையின் கிளைகள் கிளிநொச்சி, முல்லைத்தீவுமற்றும் வவுனியா நகரங்களில் நிறுவப்படவுள்ளதாக சபையின் தலைவர் நிமால் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இதில் இணைந்துக் கொள்ளலாம் எனவும் அவர் விரும்பிய தொகையை ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடபகுதி மக்கள் இதில் அதிக அக்கறை செலுத்தி வருவதாகவும் சமூக பாதுகாப்புச் சபைக்கு பங்களிப்பு செய்தவர்களில் அதிகளவானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அமரசிங்க மேலும் கூறியுள்ளார்.

(6-2)

# இராசி பலன்

*14.08.2010*
*(ஆடி 29, சனிக்கிழமை)*
*பஞ்சமி முன்னிரவு 9.37 மணிவரை*
*அத்தம் பிற்பகல் 2.46 மணிவரை*
*இராகுகாலம் 9.05-10.35 மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*
*கருட பஞ்சமி*

**மேடம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதாயமும் கிட்டும், தொலைபேசி மூலம் கனிந்த தகவல் ஒன்று கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், பெரியோரின் ஒத்துழைப்பு கிடைக்கும், சொத்துக்கள் தொடர்பான பிணக்குகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி மூலம் பொன்னான செய்தி ஒன்று கிடைக்கும், பொதுச் சேவைகளில் நாட்டம் கொள்வீர்கள்.

**கடகம்** கனிவான பேச்சுக்களால் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், நேற்றைய பிரச்சனையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்தியுண்டு

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், பேச்சில் இனிமை பிறக்கும்.

**கன்னி** குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள்.

**துலாம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், ஒருசில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியேற்படலாம், வேலைப்பழு அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்தி வீடு வந்து சேரும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், நல்ல செய்திகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், நண்பர்கள் மூலம் பாராட்டுப் பெறுவீர்கள், ஆரோக்கியத்துடன் உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

**மகரம்** சொத்துக்கள் தொடர்பான பகை தீரும், ஆன்றோர் சந்திப்பால் ஏற்றம்காணலாம், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானமாக செயற்படுவது நல்லது, புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது, உடல் நலனில் அக்கறை தேவை.

**மீனம்** மனதிற்கினிய சம்பவம் நடைபெறும் நாள், இனசன வருகையுண்டு, குடும்பத்தில் அன்னியோன்யம் ஏற்படும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் யோசனையுண்டு.

வளவன்

# பேசும் படம்




# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 110 |
| தக்காளி | 50 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 100 | 120 | 110 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 90 | 100 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 60 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 100 |
| போஞ்சி | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |

# பரத நாட்டிய பட்டப்படிப்புக்கான —விண்ணப்பம் கோரல்—

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்வி வளாகம் கடந்த பரத நாட்டியப் பட்டப்படிப்புக்கான முது நுண்கலைமானி (எம்.எப்.ஏ), இள நுண்கலைமாணி (பி.எப்.ஏ), பெரும் சான்றிதழ் கற்கைநெறி ஆகிய பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம் என கலைத் தூது அழகியற் கல்லூரி அதிபர் திருமதி பி.எப்.சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வருடம் இக் கல்லூரியிலிருந்து மேற்படி பட்டப்படிப்பை மேற்கொண்ட 16 பேர் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-51)

# வீதி திருத்தி தரப்படுமா? மக்கள் கோரிக்கை

(கைதடி)

கைதடி சந்தியிலிருந்து கைதடி வடக்கு நவபூரம் செல்லும் வீதியானது செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதன் காரணமாக இவ் வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வயது முதிர்ந்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மழைக் காலம் அண்மிக்கின்றமையால் இவ்வீதியால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

அத்துடன் இப் பாதையூடாகச் செல்லும் பாடசாலை சேவை, இ.போ.ச. பேருந்துகள் என்பன வீதி சீரின்மை காரணமாக பல்வேறு தடங்கல்களை எதிர்நோக்குகின்றன.

எனவே இவ்வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி சீர் செய்து தருமாறு இப்பகுதி மாணவர்களும் பெரியவர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-2)

# சமதர்ம கூட்டுறவுச்சிற்பி நூல் வெளியீட்டு விழா

(கொழும்புத்துறை)

"சமதர்ம கூட்டுறவுச் சிற்பி" எனும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கட்டவேலி நெல்லியடி பல.நோ. கூ.சங்க தலைவர் க.சிதம்பரநாதன் தலைமையில் நெல்லியடி முருகன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பிரபல சமூக சேவையாளரும் சமாதான நீதவானுமாகிய ந.பாஸ்கரன் மற்றும் திருமதி இந்திராணி பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கு.அருந்தநாதன், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தம்பையா சிதம்பரப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக கட்டைவேலி நெல்லியடி கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (6-51)




## செயலமர்வுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 11 இல் கல்விபயிலும் இருமொழி மூல மாணவர்களுக்கான விஞ்ஞான மாதிரி வினாத்தாள் பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி பட்டறைக்குத் தரம் 11 இல் கல்வி பயிலும் இரு மொழி மூல மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் இருமொழி மூல சகல பாட ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் இரு மொழி மூல சகல பாட ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என இருமொழி மூல இணைப்பாளரும் வடமராட்சி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி. ரோகினி கருணேஸ்வரன் தெரிவித்துள்ளார். (6-2-19)

✠✠

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் முற்பகல் 8.30 மணிக்கு யாழ்.கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குறிப்பிட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை மடத்தடி ஸ்ரீ நாக புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை 9 ஆம் நாள் தெருவீதி உலாவாக அம்பாள் ஆலயத்தில் எழுந்தருளி கந்தரோடை ஞானவைரவர் ஆலய வீதி வழியாக தம்மளை சீரணி நாகம்மாள் ஆலயம், தொட்டிலடி, மாசியப்பிட்டி சிவனாலயம், கந்தரோடை வழியாக சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயம் சென்று மருதனார்மடம், உடுவில் கந்தையா உபாத்தியார் வீதி வழியாக கந்தரோடை அருளானந்த பிள்ளையார் ஆலயம், பருத்தியோடை பேச்சியம்பாள் ஆலயம் சென்று அம்பாள் இருப்பிடம் வந்தடையும் எனவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இதுவரை மின்சாரம் கிடைக்காத பகுதிகள் இருப்பின் உடனடியாக அறிவிக்கவும்

## சில்வேஸ்திரி அலன்ரின் எம்.பி.கோரிக்கை

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் இதுவரை மின்சாரம் கிடைக்கப்பெறாத பகுதிகள் இருப்பின், உடனடியாக தங்கள் கவனத்திற்கு அறியத்தர வேண்டும் என்று கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட திணைக்கள பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மின்சாரம் தொடர்பான தத்தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். இப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரி வித்துள்ளார்.

இதுவரை காலமும் பிரதேச செயலக தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டமானது வருங்காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-2-134)

## லொத்தர் சீட்டு விற்பனைச் சாவடி

(நவாலி)

நிதி மற்றும் திட்டமிடும் அமைச்சின் கீழ் இயங்கும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் யாழ். மாவட்டத்தில் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை அதிகரிக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட விற்பனை முகவர்களுக்கு விற்பனைச் சாவடிகள் வழங்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட முகவர் என்.தேவராஜன் தெரிவித்துள்ளார். (6)

## கொக்குவில் இந்துவின் மாணவர்கள் கவனத்திற்கு

க.பொ.த உயர்தர பொது தகவல் தொழில்நுட்ப (GIT) பரீட்சைக்குத் தோற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான விசேட வகுப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் இவ் வகுப்பில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் கேட்டுள்ளார். (6)

## புலமைப்பரிசில் பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(அல்வாய்)

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் கடமையாற்றவுள்ள இணைப்பாளர், உதவி இணைப்பாளர், மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அலுவலர்களை இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறும் அன்றைய தினம் பரீட்சைக்குரிய ஆவணங்களும் வழங்கப்படும் எனவும் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-19)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ''தமிழும் சைவமும்'' என்னும் விடயம் பற்றி ஓய்வு பெற்ற சுகாதார உத்தியோகத்தர் சண்முகம் தேவன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (6-4-35)

✠✠

(மருதங்கேணி)

பொலிகண்டி இருபை மூலை சித்தி விநாயக ஆலய மஹோற்சவத்தை ஒட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் உற்சவ கால 10 நாட்களும் ''மகாபாரதம்'' என்னும் விடயம் பற்றி பண்டிதர் சைவப் புலவர் பொன். சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். 10 நாட்களும் நடைபெறும் சொற்பொழிவை மையமாக வைத்து சமய அறிவு போட்டி ஒன்றை நடத்தி பரிசில்கள் வழங்க ஆலய பரிபாலன சபை தீர்மானித்துள்ளது. (6-4-35)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பறமும் மறுநாள் காலை 9.15 மணிக்கு இரதோற்சவமும் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை தீர்த்தமும் இடம்பெறவுள் ளது.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு அன்றைய தினம் மாலை 7 மணிக்கு 'அ' என்னும் பொருளில் பண்டிதர் பொன் .சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். பாதுகாப்பு படை தலைமையகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவிருந்த இருபது ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி அன்றைய தினம் நடைபெற மாட்டாது எனவும் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். பாதுகாப்பு படை தலைமையகம் அறிவித்துள்ளது. (6)

## இரத்ததான நிகழ்வு

(கைதடி)

கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு சனசமூக நிலைய அங்கத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு நிலைய மண்டபத்தில் வைத்து இரத்ததானம் வழங்கினர்.

இந்நிகழ்வில் இரத்த வங்கி வைத்திய அதிகாரி டாக்டர்.சிந்துஜா கலந்து கொண்டார். (6-2)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி
## (பங்கர் அப்பா)

(Ocean wealth (சமுத்திர திரவியம்)
உரிமையாளரும் பிரபல வர்த்தகரும்)

மலர்வு
22.11.1942

உதிர்வு
06.08.2008

காலன் உம்மைக்
கவர்ந்து சென்றதே
கடுகதியில் ஆண்டுகள்
இரண்டு ஆனதே!
கண் விழித்த நாள் முதலாய்
பாசத்தின் உருவாய்
வலம் வந்த எம் -
இதயத்தின் தெய்வமே!
நீர் எம்மை விட்டு
பிரிந்த மாயமென்ன?
இப்பூமி தன் நிலைமாறினும்
அண்டமா சீரம் உடைந்து போயினும்
உம்மீது கொண்ட அன்பு
என்றுமே காலத்தால் அழியாது.

14.08.2010 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத்தலைவரின் 2 ஆம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ஊறணி,
வல்வெட்டித்துறை.

உங்கள் நினைவலையுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(2164)

# ஈழத்தவர் வரலாறு

4

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாகியான் என்ற நாடுகாண் பயணி, இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றித் தனது நூலில் எழுதியுள்ளார். அவரின்படி இந்தத் தீவில் ஆதியில் தேவதைகளும் நாகர்களும் இருந்தார்கள் என்றும் அவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளுடன் வர்த்தகம் நடாத்தி வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். வர்த்தகம் நடாத்தக் கூடியளவிற்கு நாகர்கள் கலாசார மேம்பாடுடையவர்களாக விளங்கியுள்ளனர்.

சிங்கள வரலாற்றாசிரியர் நாகர்களை மனிதர்களாக ஏற்கத் தயாராகவில்லை. மகாவம்சம் குறிப்பிடுகின்ற இயக்கர், நாகர் என்போர் மனித வர்க்கத்தினரைக் குறிக்கவில்லையென மெண்டிசும், மகாவம்சத்திலும் மணிமேகலையிலும் நாகர் ஒருபோதும் மனிதவர்க்கத்தினராகக் காட்டப்படவில்லை என பரணவிதானவும் கூறியுள்ளனர். இவை சிரிப்பிற்குரிய அவதா னிப்புக்களாம்.

'இயக்கர்களும் நாகர்களும் மனிதர்களாக ஆதி இலங்கையில் வாழ்ந்தார்கள் என்று கூறுவதில் தவறில்லை'. சிங்கஹ விஜயனின் வருகையுடன் தான் இலங்கைத் தீவில் மக்கட் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற்காக இத்தீவின் மூதாதையினரை அமானுஸ்யர்கள் என வலியுறுத்தியுள்ளனர் போலும்.

### 2.3 திராவிடர்

ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகின்றது. இன்றைய சிங்கள - தமிழ்மொழி பேசுவோர் அவர்களின் சந்ததியினரே என்பதும் உறுதியாகின்றது. அத்துடன் இவ்விரு மொழி பேசுவோருக்கிடையே ஏற்பட்ட கலாசார வேறுபாடு ஈழத்தின் வரலாற்றுக் காலத்தில் பௌத்தமதத்தின் வருகையோடுதான் ஏற்பட்டது எனலாம். இங்குள்ள சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் மூதாதையினர் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினாற் போல தெரிகின்றது. இவற்றுட் தமிழோடு சிங்களத்தின் மூதாதைமொழியாகிய 'எலு'வும் காணப்பட்டது எனலாம். இந்த எலு மொழி பௌத்தம் வந்தபோது அதன் சமயமொழியாகிய பிராகிருதமாகிய பாளியுடன் கலந்தபோதே இன்றைய சிங்களமொழி உருவாகியது. அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த தொல்பொருட்சான்றுகள் இலங்கையில் சிங்கஹ விஜயன் வருவதற்கு முன்னரே திராவிட மக்கள் தமக்குரிய கலாசாரத்துடன் வாழ்ந்துவந்துள்ளனர் என்பதை நிரூபிப்பனவாகவுள்ளன.

ஆரியர்கள் வட இந்தியாவில் நிலைகொண்டபோது, திராவிடர்கள் ஆரியர்களால் நெருக்கப்பட்டு இந்தியாவின் தென்பாகத்திற்கும் இலங்கைக்கும் குடிபெயர்ந்தார்கள். அவ்வாறு இடம்பெயர்ந்த திராவிடர்களின் குடியேற்றம் நாகதீவில் மிகக் கூடுதலாக



ஆதிச்சநல்லூரில் (தமிழ்நாடு) அண்மையில் அகழ்ந்து பெறப்பட்ட ஆதி இரும்புக்கால மட்பாண்ட ஓட்டில் காணப்படும் அழகிய சித்திரவேலைப்பாடு. நெற்பயிர், மான், முதலை மற்றும் கொக்கு ஆகியவை ஒரு பெண் உருவத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நிகழ்ந்திருத்தல் வேண்டும். தென்னிலங்கையில் சிங்ஹல விஜயனைத் தொடர்ந்து புதிய குடியேற்றங்கள் நிலைகொள்ளத் தொடங்கியவேளை, வட இலங்கையில் திராவிடக் குடியேற்றம் வளர்வதாயிற்று. சேர்.போல் பீரிஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி, விஜயன் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வட இலங்கையில் குடியிருப்புகள் விருத்தியுற்றிருந்தன என்பதாகும். இந்தியாவிலிருந்து ஆக முப்பது மைல் கடலே வட இலங்கையைப் பிரிக்கின்றது. அதனை இலகுவில் கலங்களில் தாண்டி வட இலங்கையில் குடியிருப்புகள் உருவாகின.

இலங்கைத்தீவின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். ஆதிக்குடிகள் இவர்களாயின், இவர்கள் திராவிடர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளாகப் பின்வருவன உள்ளன:

1) ஈமச்சின்னங்கள்
2) ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள்
3) ஆதிமக்களது சமய வழிபாடு


தொல்லியலாய்வுகள் மூலம் இன்று இக்கருத்தினை நிலைநாட்டிய பெருமை ஈழத்தின் மூன்றாம் தலைமுறை வரலாற்றாசிரியர்களுக்கும் தொல்லியலாய்வாளர்களுக்கும் உரியதாகும்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே மனிதகுலம் நிலைபெற்றிருந்தது என்பதற்கு ஆதாரமாகப் பலாங்கொடைப் பகுதியில் அகழ்வாய்வின் மூலம் கிடைத்த புராதன மனிதரின் எலும்புச் சுவடுகள் "ஆதாரமாகின்றன. நியாண்டல்தால் மனிதரின் சுவடொத்த இவை இலங்கையில் ஆதிமனிதர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாகின்றன.

### 2.3.1. திராவிட மக்களது ஈமச்சின்னங்கள்

இலங்கையின் ஆதிக்குடிகளுக்குரிய கலாசாரம் பெருங்கற்காலக் கலாசாரம் என தொல்லியலாளர் இனங்கண்டுள்ளனர். இறந்தோரை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களைப் படைத்ததால் இது இவ்வாறு பெயர் பெற்றது எனலாம்.

இம்மக்கள் படைத்த ஈமச் சின்னங்கள் பல்வகைப்பட்டன. கல்லறை கள், கல்பட்டங்கள், கல்மேசைகள், நடுகற்கள் போன்றவற்றோடு, எவ்வித ஈமச்சின்னங்களு மின்றி



ஆதிச்சநல்லூரில் அகழ்ந்து பெறப்பட்ட தாழி. சவ அடக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட இப்படியான பெருந்தாழிகள் பல இலங்கையில் பொம்பரிப்பிலும் கிடைத்துள்ளன. பழந்தமிழ் நூல்களில் வரும் 'தாழியில் அடைப்போர்' என்ற குறிப்பு இப்படியான தாழி அடக்கங்களைச் செய்வோரை குறிப்பிடும்.

அடக்கம் செய்தல் போன்றவை இவற்றுட் சிலவாகும். கடந்த நூற்றாண்டில் பாக்கர் திசாமகாராமப் பகுதியில் அகழ்வினை மேற்கொண்டபோது இத்தகைய தடயங்களைக் கண்டுபிடித்தார். இத்தகைய ஈமச் சின்னங்களுக்கு மேலாக தாழி அடக்கமுறை திராவிடக் கலாசாரத்திற்குரிய ஒன்றாகும். மரணமடைந்த தலைவனைப் பெருந் தாழி (பானை) ஒன்றினுள் இட்டு, அவன்


கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

உபயோகித்த பொருட்களையும் கூடவே வைத்து புதைக்கின்ற ஈமத்தாழி / முதுமக்கள் தாழி முறை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்ட திராவிட மக்களது கலாசாரம் என்பது இன்று நிரூபணமாகிவிட்டது. (தொடரும்)

# தமிழ்க் கற்றல் கற்பித்தலில் மின் கற்றல் முறை

1

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை




### 1.0 அறிமுகம்

மரநிழல், திண்ணை, வகுப்பறை என்ற எல்லைக்குள், குறிப்பிட்ட கால வரையறைக்குள் வழங்கப்பட்டு வந்த கற்றல்முறை, தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனால், பரந்து, விரிந்து, எல்லைகளையும் வரையறைகளையும் கடந்த இணையவழிக் கல்வியாக - கற்றலாக இன்று வளர்ந்துள்ளது. உலகளாவிய நிலையில், தமிழ்மொழிக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உகந்த ஓர் அறிவியல் வழி இணையம். இதன் முதுகெலும்பாய்த் திகழ்வது மின்கற்றல். இக்கற்றல் முறையில் தயாரிக்கப்பட்ட தமிழ் இணையப் பல்கலைக் கழகப் பாடங்கள் மற்றும் அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியாப் பல்கலைக் கழகப் பாடங்கள் பற்றிய ஒரு மதிப்பீடாக இக்கட்டுரை அமைகிறது.

### 1.1 மரபுவழிக் கற்றலும் இணையவழிக் கற்றலும்

ஆசிரியரையே மையமாகக் கொண்டு, ஆசிரியரை நம்பி, ஆசிரியரே எல்லாம் வல்ல ஆசானாகச் செயற்பட்டு, தனி ஆளுமை செய்து கற்பித்த மரபுவழிக் கற்றல் முறை, கணனிகள் பயன்பாட்டால் - குறிப்பாகத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் பெற்ற பல்லூடகத் தொழில்நுட்ப தொழில்நுட்ப நெறிமுறைகளால் (Multimedia Technologies) இணையவழியில், மாணவன் தானே கற்கும் புதிய கற்றல் முறையாக - மின் கற்றலாகவும் இன்று வளர்ச்சி பெற்றுள்ளது.

### 2.0 மின்கற்றல்

மின்னியலின் (Electronics) பயன்பாட்டுகளைப் பயன்படுத்திக் கணனியின் துணையுடன் கற்பிக்கும் CSCL (Computer supported Colobrating Learning) என்று கூறப்படும் கற்றல் முறை ' மின் -கற்றல்" என்று அழைக்கப்படுகிறது. 'E-learning' என்று குறிப்பிடுவதில் 'E' என்பது 'Electronics' என்பதைச் சுட்டினாலும், இக்கற்றலின் தன்மைகளின் அடிப்படையில், Evolving or Everywhere or Enhanced or Extended என்பவையும் பொருந்தும் என்றும் சுட்டுவர். மாணவன் சுயமாகச் சிந்தித்தல், தன்னைத்தானே மதிப்பிடல், தன்னைத்தானே வளப்படுத்தல், குறிக்கோளுடன் செயற்படல், தொடர்ந்து விருப்பத்துடன் கற்கும் ஆர்வம் பெறல் போன்ற நல்வாய்ப்புக்களை நல்கும் இக் கல்விமுறை, கற்றலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்னும் மிகையாகா.

### 2.1 மின்கற்றல் முறை

பொதுவாக, வாகனங்களை ஓட்டுவதற்கான பயிற்சியில், அந்த வாகனங்களைப் பெற்று, அந்த வாகனங்களிலேயே பயிற்சி பெறுவர். அப்பொழுது தான் ஓட்டும் வாகனத்தின் செயற்பாடுகளையும், அதைக் கட்டுப்படுத்தும் திறனையும் அறியமுடியும் என்று நம்புகின்றனர். ஆனால், விமானம் ஓட்டுநர் பயிற்சியில், பயிற்சி பெறுபவர்க்கு விமானம் கொடுக்கப்படுவதில்லை. ஓர் அறையில், ஒரு வரையறை செய்த விமான வடிவமைப்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. விமானத்தில் இருப்பது போன்ற இயந்திர இணைப்புக்கள் (Console) பொருந்திய, விமான ஓட்டுநருக்குரிய ஒரு காக்கிட் (Cockpit) இருக்கும். விமானத்தில் சிற்றறையில் (Cabin) உள்ள சன்னல்களுக்குப் பதிலாக, இரண்டு திரைகள் பொருத்தப்பட்டிருக்கும். கணனியின் உதவியால், விமானத்தை ஓட்டுவதற்கான அறிவுறுத்தலும், வழிகாட்டல்களும் (Guidance) செயல்முறை பற்றிய விளக்கங்களும் பயிற்சியாளர்கள் பெறுவர். இவற்றின் துணையுடன் பயிற்சியாளர், ஒரு விமானத்தைத் தானே ஓட்டிப் பயிற்சிப் பெறுவது போல, உயரம் (Attitude), கட்டுப்பாடு (Control), செய்நிரல் (Programme) ஆகியவற்றைக் கணிக்கும் அறிவும், திறனும் தீர்மானமும் (Decision) தானே பெற்றுக்கொள்வர்.

ஓர் அறையில் பொருத்தப்பட்டுள்ள, இந்த அமைப்பில் உள்ள விமானத்தில் அமர்ந்து, விமானத்தை தானே இயக்குவது போன்ற அனுபவத்தைப் பெறுகின்றனர். இச் செயற்பாடுகள் முழுவதையும் கணனியின் வாயிலாகவே பெறுகின்றனர். விமானத்தில் அமர்ந்து, விமானத்தை ஓட்டாமலே, விமானத்தை ஓட்டுவதற்குரிய பயிற்சியை திறனு

பேரா.ம.செ.இரபிசிங்

டனும், புரிதலுடனும் நம்பிக்கையுடனும் குறிக்கோளுடனும் தன்னைத்தானே மதிப்பிடலுடனும் பெற்றுக்கொள்வதைப்போல, வகுப்பறைக்குச் செல்லாமலே, ஆசிரியரின் வழிகாட்டல் இல்லாமலே, வகுப்பறையில் பெற இயலாத பல நவீன தொழில்நுட்ப வாயிலான பல்லூடகங்களின் துணையுடன் கற்கும் கற்றலை மின்கற்றல் வழங்குகிறது. இந்தியாவில் கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப கல்விநிறுவனம் (IIT) மின் - கற்றலுக்கான ஒரு தளத்தை அமைத்து, மின் கற்றலை ஊக்குவித்துப் பிரபலப்படுத்தி வருகிறது. (தொடரும்)

# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும்

## சீனா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீனா அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் கீழ் கட்டுமான வசதிகளை மேம்படுத்தவும் சீனா பூரண ஆதரவளிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசிற்கும் அந் நாட்டுத் துணைப்பிரதமர் லீ கீவாங்கிற்கும் இடையிலான சந்திப்பின் போதும் இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

கடந்த 53 ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான பிணைப்பு நிலவி வருவதாகத் துணைப் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரே சீனா என்ற கோட்பாட்டிற்கு இலங்கை தொடர்ச்சியாக அளித்து வரும் ஆதரவு பாராட்டுக்குரியதென அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள சங்காய் எக்ஸ்போ- 2010 கண்காட்சியின் நிறைவு விழாவில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு இதன் பின்னரும் சீனா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுக்குரியதென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (6-2)

# சிறைச்சாலைகளில் நிலவும் சனநெரிசலுக்கு இளம் நீதவான்களே காரணம்

## அமைச்சர் டியூ குணசேகர குற்றச்சாட்டு



சிறைச்சாலைகளில் சன நெரிசல் ஏற்படுவதற்கு இளம் நீதவான்களே காரணம் என சிறைச்சாலைகள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் நீதி என்ற தொனிப்பொருளில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய அபராதங்களை செலுத்த முடியாத குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுவதாகவும் அநேகமான இளம் நீதவான்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

சிறைத்தண்டனைகளை விதிப்பதனை விடவும் அவர்களை நல்வழிப்படுத்தக் கூடிய வகையில் நீதவான்கள் தீர்ப்புக்களை வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கைதிகளை பராமரிப்பதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# அமைச்சர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்த இளைஞர் கைதானார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் எனத் தம்மை அடையாளப்படுத்தி அமைச்சர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமைச்சர்களுக்கு அமைச்சு செயலாளர்களுக்கும் கையடக்கத் தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விடுத்த தமிழ் இளைஞர் ஒருவரையே மாளிகாவத்தை பொலிசார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கையடக்கத் தொலைபேசிக்கு கிடைக்கப் பெற்ற கொலை மிரட்டல் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட போது குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புளத் சிங்கள பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் குறித்த தமிழ் இளைஞர் பிரபல அரசியல்வாதி ஒருவரின் சார்பில் தேர்தல் பிரசாரக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் குரோதம் காரணமாக இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களின் தொலைபேசி இலக்கங்களைக் கொடுத்து அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்குமாறு பிரபல அரசியல்வாதி ஒருவர் தமக்கு அறிவுறுத்தல் கொடுத்ததாக குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார். (6-2)

# திருவிழா திருப்பலி

(நல்லூர்)

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழா திருப்பலியும் திருச்சுருவப் பவனியும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (6-2-134)

# ஒழுக்கமுடைய சமுதாயத்தை கட்டியெழுப்ப இளைஞர்கள் முன்வர வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஒழுக்கமுடைய சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பு இளைஞர், யுவதிகளுக்குக் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் இளைஞர், யுவதிகளின் கனவுகள் மெய்ப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உலக இளைஞர் வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதென அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# மாணவர்களை சேர்க்க போலி ஆவணங்களை சமர்ப்பிக்கும் பெற்றோர் மீது நடவடிக்கை

## கல்வியமைச்சு அறிவிப்பு

பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளை சேர்ப்பதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளும் நோக்கில், போலியான ஆவணங்களை சமர்ப்பிக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கவிருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளைச் சேர்க்கும் நோக்கில் போலி ஆவணங்கள் சமர்பிக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாக தினமும் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இவ்வாறான செயல்களுக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன தீர்மானித்திருப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வருடம் முதலாம் ஆண்டில் அனுமதிக்கப்படவுள்ள மாணவர்களுக்கான நேர்காணல் பரீட்சை ஆரம்பமாகியுள்ளதுடன் இது அடுத்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை ஆசிரியர் தலைமையிலான விசேட சபை மற்றும் உப அதிபர், ஆரம்பப் பிரிவு, பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் மேற்படி புதிதாக சேரவுள்ள முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான நேர்காணல் பரீட்சை நடத்தப்படுகிறது. (6-2)

# தேசிய தணிக்கைக் குழுவில் முஸ்லிம் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

தணிக்கை குழுவில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியையேனும் உள்ளடக்க வேண்டுமென இலங்கை முஸ்லிம் ஊடகவியலாளர் பேரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் கோரியுள்ளது.

கடந்த கால தணிக்கைக் குழுக்களில் முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாக பேரவையின் தலைவர் அமீன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலாசார அமைச்சினால் நியமிக்கப்பட்ட புதிய தணிக்கைக் குழுவில் ஏன் முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது தெரியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய சட்டங்களை மீறும் வகையில் காணப்படும் உள்நாட்டு,வெளிநாட்டு திரைப் படங்கள் தடை செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கு முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் தணிக்கை குழுவில் அங்கம் வகிப்பது அவசியமானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தணிக்கை குழுவில் முஸ்லிம் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், கலாசார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கும் ஏற்கனவே எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் ஊடகப் பேரவை அறிவித்துள்ளது. (6-2)



நவாலி வடக்கு புலவர்வீதி அண்மையில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் செப்பனிடப்பட்டுள்ளதையும் அத்துடன் அரசடிச் சந்தியில் சேதமடைந்துள்ள பெயர் வளைவு கற்கள் மீண்டும் அழகாகக் கட்டப்பட்டுள்ளதையும் படத்தில் காணலாம். (படம்:- நவாலி நிருபர்)

# பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அரச காணிகளில் வசிப்போர் வெளியேற்றப்படவுள்ளனர்

கொழும்பில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அரச காணிகளிலிருந்து வறிய மக்கள் வெளியேற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரச காணிகளில் 66 ஆயிரம் வறிய குடும்பங்கள் தங்கியிருப்பதாகவும் அவர்களை வெளியேற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை அறிவித்துள்ளது.

குறித்த காணிகள் வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவுள்ள அதேவேளை வறிய மக்களுக்கு வேறு இடங்களில் வீடமைப்பு திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் வசித்து வரும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கிலும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காணிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (6-2)

# அமெரிக்க காங்கிரஸ் விசாரணையை இலங்கை அரசாங்கம் ஏற்காது

## அமைச்சர் யாப்பா திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கை மீது கூறப்படுகின்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் எடுக்கும் முயற்சிகளை இலங்கை ஏற்கப் போவதில்லை என்றும் இந்த விசாரணைக்கு எந்த ஒத்துழைப்பையும் வழங்க போவதில்லை என்றும் அமைச்சரவையின் பேச்சாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்தார். இன மோதலுக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள், மனிதாபிமான நடவடிக்கை, போர் நிறுத்த உடன்பாடு என்பவற்றை ஆராய்வதற்கு என இலங்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் இணக்கப்பாடு ஆணைக்குழு என்னும் சுதந்திரமான ஆணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்த நிலையில் வேறு எந்த விசாரணையும் தேவை இல்லை எனவும் அவர் கூறினார். அவர் மேலும் கூறுகையில், பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் பல நாடுகள் தோல்வி கண்டன, தோல்வி கண்டும் வருகின்றன. ஆனால் இலங்கை வெற்றி கண்டது. இந்த வெற்றியை தோற்கடிப்பதில் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் விடாப்பிடியாக உள்ளன. (6)

# வடக்கு முஸ்லிம்களை புத்தளத்தில் பதியும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக தங்கியுள்ள முஸ்லிம்களை புத்தளம் வாக்காளர் இடாப்பில் பதியும் நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதாகவும், அவர்களே புத்தளத்தில் தற்காலிகமாக தங்கியிருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் சீமெந்து வீடுக்ளை கட்டியிருக்கும் முஸ்லிம்கள் நிரந்தரமாக புத்தளத்தில் வதிவதாக் தேர்தல் செயலகம் மதிப்பீடு செய்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரீ.ஹசன் அலிதெரிவித்துள்ளார்.

மேலதிக தேர்தல் ஆணையாளர் பீ.எம். சிறிவர்த்தனவினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவிற்கு வடக்கு இடம்பெயர் முஸ்லிம்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (6-2)

# எதிர்க்கட்சித் தலைவருக்கு புதிய வாகனம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு புதிய உத்தியோகபூர்வ வாகனமொன்றை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு புதிய உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்பட வேண்டுமென பிரதமர் டி.எம்.ஜயரட்ன அமைச்சரவையில் யோசனைத் திட்டமொன்றை முன்வைத்துள்ளார்.

பிரதமரின் இந்த யோசனைத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது பயன்படுத்தி வரும் உத்தியோகபூர்வ வாகனம் 12 ஆண்டுகள் பழைமையானதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு புதிய வாகனமொன்று வழங்கப்பட உள்ளது. (6-2)

# நாட்டின் அபிவிருத்தியை பிரதிபலிக்கும் வகையில் புதிய நாணயத்தாள்கள் வெளியிடப்படவுள்ளன

## மத்திய வங்கி அறிவிப்பு

நாட்டின் அபிவிருத்தியை பிரதிபலிக்கும் வகையில் புதிய நாணயத் தாள்களை அச்சிட்டு வெளியிடப்பட உள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இரண்டாயிரம் ரூபா நாணயத்தாளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து தாள்களும் அச்சிட்டு வெளியிடப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு இந்த நாணயத்தாள்கள் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளன.

எதிர்வரும் வருடம் மார்ச் மாதமளவில் நாணயத் தாள்கள் புழக்கத்தில் விடப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாணயத் தாள் வெளியீட்டிற்கு மேலதிகமாக நாணயக் குற்றியொன்றும் வெளியிடப்படவுள்ளது.

"பொருளாதார அபிவிருத்தியும் சுபீட்சமும்" என்ற தொனிப்பொருளில் நாணயத்தாள்கள் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளன.

இந்த நாணயத் தாள்களின் தொழில்நுட்ப விடயங்கள் குறித்த எவ்வித தகவல்களையும் மத்திய வங்கி வெளியிடவில்லை. (6)

# மணியந்தோட்டம் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையிலுள்ள மணியந்தோட்டப்பகுதியில் தற்போது சட்டவிரோத மண் அகழ்வுகள் நடைபெற்று வருகிறது. அரியாலைப் பகுதியூடாக அகழ்வு நடவடிக்கையினை மேற்கொள்ளச் செல்வோர் கடற்கரைப் பிரதேசத்திற்கு மிக அண்மையில் இரவிரவாக மண்அகழ்வு நடவடிக்கை யில் ஈடுபடுகின்றனர். இதனால் கடல்நீர் கிராமத்துக்குள் பாயும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. இவற்றைத் தடுக்குமாறு சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே மக்களின் நலனை கருத்திற்கொண்டு இச் சட்டவிரோத மண் அகழ்வுப் பணியினை நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-2)

# 14.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1248- உலக பாரம்பரியக் களங்களில் ஒன்றான ஜெர்மனியின் கொலோன் கதீட்ரல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இது 1880 இலேயே கட்டி முடிக்கப்பட்டது.
- 1900- ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க கூட்டுப் படைகள் பெய்ஜிங் நகரை ஆக்கிரமித்தன.
- 1908- முதலாவது அழகுப் போட்டி இங்கிலாந்தின் போக்ஸ்டன் நகரில் இடம்பெற்றன.
- 1912- நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு அரசை அமைக்க அமெரிக்கக் கடற்படையினர் நிக்கராகுவாவை முற்றுகையிட்டனர்.
- 1921- தன்னு துவா என்ற புதிய நாடு (தற்போதைய திவா) உருவாக்கப்பட்டது.
- 1937 - ஆறு ஜப்பானிய விமானங்கள் சீனாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1945- பசுபிக் போர் முடிவுற்றது.
- 1945- இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் விதிகளுக்கமைய ஜப்பான் சரணடைந்தது.
- 1947- பிரித்தானியா இந்தியாவில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தான் விடுதலை அடைந்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்தது.
- 1969- வட அயர்லாந்துக்கு ஐக்கிய இராச்சிய இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.
- 1972- கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த விமானம் கிழக்கு பேர்லின் விமான நிலையத்திலிருந்து கிளம்பும்போது விபத்துக்குள்ளாகியதில் 156 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980- போலந்தில் தொழிற்சங்கத் தலைவர் லெக் வலேசா தலைமையில் வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டது.
- 2006- இஸ்ரேல் - லெபனான் போர் முடிவுக்கு வந்தது.
- 2007- ஈராக்கில் கட்டானியா என்ற இடத்தில் இடம்பெற்ற நான்கு தொடர் குண்டுவெடிப்புகளில் 796 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1867- ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில நாவலாசிரியர் (இ. 1933)
- 1911- வேதாத்திரி மகரிஷி, இந்திய ஆன்மீகத் தலைவர் (இ. 2006)
- 1959- மேஜிக் ஜான்சன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1941- போல் சபாடியே, பிரெஞ்சு வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1854)
- 1953- க.சிவபாதசுந்தரனார், யாழ்ப்பாணம் புலோலியூர் சைவப் பெரியார் (பி. 1878)
- 1958- பிரெட்றிக் ஜோலியோ, பிரேஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 1979- என்.எம்.பெரேரா, இலங்கையின் மாக்சியவாதி.
- 2004- செஸ்லோ மிலோஸ், போலந்து எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)
- 2007- இராம.சம்பந்தம், தினமணி முன்னாள் ஆசிரியர்.

### சிறப்பு நாள்

- பாகிஸ்தான் - விடுதலை நாள் (1947)
- கொங்கோ - விடுதலை நாள் (1960)
- பரகுவே - கொடி நாள்

**2006 - முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 61 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.**



# தி.மு.க -காங்கிரஸ் கூட்டணி முறிந்துபோகும் அபாயத்தில்

## காங்கிரஸில் ஒரு இளங்கோவன் தி.மு.க வில் வாகை முத்தழகன்



இளங்கோவன்

"கூட்டணியை வலுப்படுத்துவதைவிட வலிப்படுத்துவதாகவே உள்ளது இளங்கோவன் பேச்சு..." என்று கருணாநிதி குற்றச்சாட்டு கூறி இருந்தார். தி.மு.க. அரசு செயற்படுத்தும் திட்டத்தில் மத்திய அரசு பணமே பெரும்பகுதி என்று இளங்கோவன் கூறிய தகவல் தவறானது என்பதையும் தன் அறிக்கையில் விளக்கியிருந்தார் கருணாநிதி. இதன் தொடர்ச்சியாக, "கூட்டணிக்கு பாதகம் ஏற்படுத்தும் விதமாகப் பேசக் கூடாது..." என தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலு 'தடா' போட்டதையும் மீறி நம்மிடம் இளங் 'கோபனாக' மாறி கொந்தளித்துவிட்டார் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன். ஏன் இந்த கோபம்? இளங்கோவனிடமே முதல் கேள்வியைக் கேட்போம்.

கேள்வி :- "தனிப்பட்ட முறையில் உங்களுக்கு கருணாநிதி மீது ஏதாவது கோபமா?

அவரைக் கோபப்படுத்தும் வார்த்தைகளையே அதிகம் உச்சரிக்கிறீர்களே?"



பதில் :- "கலைஞர் மீதோ தி.மு.க. மீதோ தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தக் கோபமும்கிடையாது. தொண்டர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவன் நான். தொண்டர்களின் மனக் குமுறலைத்தான் மேடைகளில் கொட்டுகிறேன். இதில் தவறேதும் இல்லையே? சமீபத்தில், மதுரையில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்துக்கு வந்த மக்களின் முகத்தில், இந்த அரசின் மீது வெறுப்பு இருப்பதை கண்கூடாகக் கண்டேன். காங்கிரஸ் தொண்டர்களின் மனதிலும் அதே தான்... மின் கட்டண உயர்வு, கோடி கோடியாகக் கொள்ளை, குடும்ப உறுப்பினர்களுக்கே பதவி என்று சொல்லி வருத்தப்பட்ட பொதுமக்கள், "இந்த அரசுக்கு மக்கள் நலனே முக்கியம் இல்லை" என்று என்னிடம் குமுறினார்கள்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் எங்களுக்கு இந்தக் குமுறலைக் களைய வேண்டிய உரிமை உண்டல்லவா? ராதாபுரம் பேருந்து நிலையத்துக்கு காமராஜர் பெயர் சூட்டியதற்காக நன்றி சொல்லிவிட்டு அப்படியே தி.மு.க. ஆட்சியில் உள்ள சில குறைகளைச் சுட்டிக்காட்டுவிட்டு வந்து விடலாம் என்றெண்ணி கலைஞரை சந்திக்க நேரம் கேட்டேன். ஏனோ என்னை சந்திக்க அவர் மறுத்தார். எனவே, மக்கள் சொன்ன அந்தக் குறைகளை அவர் கேட்க மறுப்பதால், மேடைகளில் கொட்டுகிறேன்."

கேள்வி :- "நீங்கள் வலி ஏற்படுத்துவதாக முதல்வர் வருத்தப்பட்ட பிறகு... ராகுல்காந்தி குறித்து அவதூறாகப் பேசிய தி.மு.க. பேச்சாளர் வாகை முத்தழகன் கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பேச்சாளரின் கருத்துகள் குறித்து காங்கிரஸிக்குள் யாரும் கேள்வி கேட்கவில்லையே?"

பதில் :- "திருச்செந்தூரில் கடந்த 31ஆம் திகதி நடந்த அந்தக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி குறித்தும், ராகுல் குறித்தும் அந்தப் பேச்சாளர் பேசிய பேச்சைக் கேட்டால்... எந்த காங்கிரஸ் தொண்டனும் கொதித்துப் போவான்! அந்த சம்பவத்துக்குப் பின் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததால், நான் இதைக் கண்டித்துப் பேசினேன். இத்தனைக்கும், மத்திய அமைச்சர் அழகிரி உட்பட தி.மு.க. முக்கியத் தலைகள் பலர் வாகை முத்தழகன் பேசியபோது அங்கே இருந்திருக்கிறார்கள். யாருமே அந்தப் பேச்சாளரை தடுக்கவில்லை. அதுதான் என் முக்கிய கோபம்.

அண்ணா காலத்தில், சென்னை கடற்கரையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் தி.மு.க.ஐம்பெரும் தலைவர்களில் ஒருவரான என்.வி.நடராஜன் பேசிக் கொண்டு இருந்தார். ஒரு கட்டத்தில் காமராஜர் குறித்து தனிப்பட்ட முறையில் மிகக் கடுமையாக அவர் தாக்கிப் பேச... அதே மேடையில் உட்கார்ந்திருந்த அண்ணா ஓடோடி வந்து. "அப்படி எல்லாம் பேசக் கூடாது" என்று என்.வி.நடராஜனை அதட்டி உட்கார வைத்தார். அதுவல்லவா அரசியல் நாகரீகம்! இந்த நாகரிகத்தை இன்றைய தி.மு.க. குழிதோண்டிப் புதைத்துவிட்டது."

கேள்வி :- "தி.மு.க-வுடன் உங்களைப் போன்ற ஒரு சிலர் மோத ஆரம்பித்துள்ள சூழலில், வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்று எதிர்பார்க்கலாமா?"

பதில் :- "கூட்டணி குறித்து முடிவு செய்வது காங்கிரஸ் மேலிடம்தான். கட்சித் தலைமை சொல்வதை இம்மி அளவும் விலகாமல் கடைப்பிடிக்கும் தொண்டர்கள் நாங்கள். அன்னை சோனியா என்ன முடிவு எடுத்தாலும் அதற்குக் கட்டுப்படுவோம். ஆனாலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "யாருடன் கூட்டணி" என்று தேடிச் செல்கிற இடத்தில் இங்கே காங்கிரஸ் இருந்ததெல்லாம் அந்தக் காலம்.

இப்போது, "காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அமைக்க வேண்டும்?" என்று இங்குள்ள பெரிய கட்சிகள் போட்டி போட்டு ஓடிவரும் அளவுக்கு வளர்ந்துவிட்டோம். இடைவிடாத முழக்கம்... எட்டுத் திக்கும் பிரசாரம்... இனி இதுதான் எங்கள் பாணி. மக்களோடு மக்களாக இணைந்து பணியாற்ற இளைஞர் கூட்டம் ஒன்று புறப்பட்டுள்ளது. வரும் தேர்தலில் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அமைய வேண்டும் என்பதே பெரும்பான்மையான காங்கிரஸ் தொண்டர்களின் விருப்பம். அந்தப் பாதையை நோக்கியே இப்போது செயற்படுகிறோம். எனவே, வரும் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி நிச்சயம். அப்படி அமையும் ஆட்சிதான் உண்மையான காமராஜர் ஆட்சி!" என முடித்தார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்!

### "கலைஞரை சீண்டினால் நெருப்பாவேன்!"

தி.மு.க., காங்கிரஸ் கூட்டணிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பேசியதாகக் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டுள்ளார்



தி.மு.க. பேச்சாளர் வாகை முத்தழகன்.

திருச்செந்தூரில் கடந்த ஜூலை 31ஆம் திகதி மத்திய அமைச்சர் மு.க. அழகிரி கலந்துகொண்ட பொதுக் கூட்டத்தில் பேசும்போது ராகுல்காந்தி குறித்து சூடாகப் பேசியிருக்கிறார் முத்தழகன். இதுதான் அவருக்கு எதிராக எழுந்த வினை! வாகை



முத்தழகனிடம் பேசினோம். "எனக்கு 52 வயசாகுதுங்க. 15ஆவது வயதிலேயே நான் தி.மு.க. மேடைகளில் ஏற ஆரம்பிச்சிட்டேன். எனக்கு கலைஞர் மீது



வாகை முத்தழகன்

எப்போதும் மரியாதை அதிகம்.

யாராவது அவரை மோசமா பேசினா, அதை தாங்கிக்க முடியாது. ராதாபுரம் பேருந்து நிலையத்துக்கு கலைஞரின் பெற்றோர் பெயரை சூட்டுவது தொடர்பான விவகாரத்தில் இளங்கோவனும் காங்கிரஸ்காரங்களும் பொறாமையோடு தலைவரை தாறுமாறா பேசினாங்க. மத்தியில் பி.ஜே.பி. அரசை இறங்க வைத்து, காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டுவரக் காரணமா இருந்தது யாரு? சோனியா மீது 'வெளிநாட்டுக்காரர்' சர்ச்சை எழுந்ததைத் தொடர்ந்து, காங்கிரஸுடன் கூட்டணி வைக்கவே பல மாநில கட்சிகளும் தயக்கம் காட்டியது. அப்போ துணிச்சலோடு, "சோனியா இந்தியாவின் மருமகள்"னு சொல்லி அவரை வரவேற்று ஆதரித்தவர் கலைஞர். அந்த நன்றி உணர்ச்சி கொஞ்சமும் இல்லாத இளங்கோவன் போன்றவங்க வாய்க்கு வந்தபடி பேசுவதை எப்படிப் பொறுத்துக்க முடியும்?

இளங்கோவன் வாய்க்கொழுப்போடு ஈழத்தமிழர்களுக்கு எதிரா பேசினார். கோபப்பட்ட தமிழ் அமைப்புகள் அவருக்கு எதிரா தீவிரப் பிரசாரம் செஞ்சதால் எம்.பி.தேர்தலில் தோற்றுப் போனார். அதுக்கு தி. மு க-காரனா பொறுப்பு? சோனியாவை வெளிநாட்டுக்காரீன்னும், பதிபக்தி இல்லாதவர்னும் திட்டிய அம்மையாரோடு ராகுல் காந்தி கூட்டணி வைக்க முயற்சி செய்யுறதா அ.தி.மு.க-காரன் பேசுறான். அதில் துளியும் உண்மை இல்லை என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமை இல்லையா? அதனால நான் பேசுனது கொச்சையும் இல்லை, பச்சையும் இல்லை.

ஜூனியர் விகடன்

எனக்கு பணமோ, பதவியோ முக்கியம் இல்லை. கலைஞர்தான் முக்கியம். அவரை மட்டுமே எனக்குத் தெரியும். அவரை எவனாவது சீண்டினால் நான் நெருப்பாகிடுறேன். என் பக்கம் நியாயம் இருக்கு. அதைப் புரிந்ததும் இன்னிக்கு நீக்கிய கலைஞரே மறுபடியும் கட்சியில் சேர்த்துக்குவார்..." என்றார் நம்பிக்கையுடன்!

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்




**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


விற்கவேண்டாம்.

இவையனைத்தையும் கவனத்தில் கொண்டால் பனிப்பூச்சியை இலகுவில் முகாமைத்துவப்படுத்தலாம். முயன்று பாருங்கள் எம்மால் இது முடியும்.

**வெங்காயப் புழுவும்**
**(Onion Maggot and Bulb rot)**
**குமிழ் அழுகலும்**

பாதை திறந்தவுடன் வெங்காயச் செய்கையாளர்கள் மனமும் மடமடவென அகலத் திறந்து கொண்டதாகவே பலரும் எண்ணினார்கள். பாதை திறந்த ஆரம்ப காலங்களில் எங்களூர் சின்ன வெங்காயத்திற்கு தென்னிலங்கை சந்தைகளில் கேள்வி

அழுகிவிடும். எனவேதான் நீர் பாய்ச்சுவதில் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியம்.

அறுவடை செய்தபின் வெங்காயக் குமிழிலுள்ள ஈரப்பதன் மற்றும் சேமித்து வைத்திருக்கும் இடத்திலுள்ள காற்றோட்டம் மற்றும் அதிலுள்ள ஈரப்பதனின் அளவு இவையிரண்டுடன் வெங்காயத்தினது இனம் இவையனைத்திலுமே குமிழ் அழுகல் தங்கியிருக்கிறது.

**தகுந்த ஈரப்பதன் அவசியம்**

அறுவடை செய்யப்பட்ட வெங்காயக் குமிழ்களை சேமிப்பதற்கு முன் பதப்படுத்துதல் அவசியம். இங்கே பதப்படுத்துதல் என்னும் போது வெங்காயத்தின் ஈரப்பதனை குறைத்தல் என்பதாகும். ஆய்வு முடிவுகளின்

கட்டி சேமிக்க முனையும் போது வெங்காயப் புழுவின் தாக்கம் சேமிப்பிலும் விரைந்து பெருக வாய்ப்பாகிவிடும். இதனாலேயே வெங்காயக் குமிழில் தொடர்ந்தும் இப்புழுவின் சேதம் அறுவடை செய்யப்பட்ட நிலத்திலிருந்து சேமிக்கும் இடத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. சேமிக்கும் இடத்திலுள்ள நெருக்கமான இருண்ட சூழ்நிலை புழுவின் விருத்தியை இன்னும் அதிகரித்து விடும். வெங்காயத்தை கத்தையாக கட்டி சேமிக்கும்போது சரியான முறையில் உணர்த்தாது நெருக்கமாகக் கட்டிவைக்கும் போது புழுவின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகள் வெங்காயக்

11-IX

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**2. வெங்காயத்தை தனிப்பயிராக செய்வது எப்போதும் பனிப்பூச்சி பெருக வழிவகுக்கும்.**

இந்நிலையில் பல பயிர் சேர்ந்த கலப்புப் பயிர்ச் செய்கையை நாடுவது சிறந்த உத்தி.

**3. சின்ன வெங்காயம் பெரிய குமிழ் வெங்காயம் ஆகியதால் வேதாளம் இனத்தை முண்டியடித்து தெரிவு செய்கின்றனர்.**

இதை விடுத்து பனிப்பூச்சியின் தாக்கத்திற்கும் பெருக்கத்திற்கும் மசிந்து கொடுக்காத சின்னம் (சிறிய) வெங்காயத்தைப் பயிரிடுவது நல்லது. இந்தியாவிலிருந்து தருவித்து பயிரிட்ட சின்ன வெங்காய இனமொன்று எதுவித பாதிப்புக்கும் ஆளாகவில்லை என விவசாயி ஒருவர் தெரிவித்ததை இந்த இடத்தில் ஞாபகப்படுத்தலாம். குமிழின் அளவை பெரிதாக்க பெரிதாக்க பீடை எதிர்ப்பு சக்தி குறைகின்றது. இது தான் பிரச்சினை. சின்ன வெங்காயத்தின் குமிழின் பருமனை அதிகரிக்க இன்னொன்று குறைகின்றது. இதுதானே இயற்கையின் நியதியும் கூட. இதனால் எங்களூர் சந்தையில் வெங்காயத்தின் கதை இப்படியாயிற்று. சின்ன வெங்காயம் (Small onion) பெரிதாகி பெரிய (குமிழ்) வெங்காயமாக மாற பெரிய வெங்காயம் (Big onion) அளவிலும் பருமனிலும் சிறிதாகி சிறிய வெங்காயமாக மாறியிருக்கிறது.

**4. ஒருவித்திலை இரு வித்தலை கலப்பு நல்லது.**

வெங்காயப் பயிர்ச் செய்கையில் இரு வித்திலைப் பயிர்களை கலந்து நடுவது நல்லது. அதுவும் குறித்த பனிப் பூச்சியின் விருந்து வழங்கிப் பயிராக இல்லாத பயிரை தெரிவு செய்யலாம்.

**5. பனிப்பூச்சியை கட்டுப்படுத்த விவசாய திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பூச்சி நாசினிகளை விசிறலாம்.**

| பூச்சி நாசினி | அளவு |
|---|---|
| 1. இமிடாகுளோர்பிறிற்று - 200g/U+SL | 10மிலீ/10லீ நீருக்கு |
| 2. பைபுரோனில் - 50g/லீ Sc - | 10 மிலீ/10லீ நீருக்கு |
| 3. புரோதயோபொஸ் - 500கி/லி Ec | 20 மிலீ/10லீ நீருக்கு |
| 4. பெந்தயோன் -500கி/ லீ Ec | 30 மிலீ/10லீ நீருக்கு |
| 5. கார்பரில் 85 % wp | 15 கி /1 0லீ நீருக்கு |

முக்கிய குறிப்பு:-

1. ஒரே பூச்சிநாசினியை திரும்ப திரும்ப விசிற வேண்டாம்.

2. தேவை கருதி பூச்சி நாசினியை விசிறவும்.

3. பூச்சி நாசினியை விசிறியவுடன் வெங்காயத் தாள்களை அறுவடை செய்து

அதிகரித்ததாலோ என்னவோ வெங்காயத்தின் விலை ஒரு கிலோ இருபதிலிருந்து நூற்றியிருபதானது நல்ல விலை கிடைத்ததால் வெங்காயச் செய்கையிலீடுபட்ட விவசாயியும் எங்களூர் சின்ன வெங்காயமும் மகிழ்வுற்றன. இந்த மகிழ்ச்சி நிலையானதாக இல்லாதிருப்பதை அவதானிக்கக்



Onion Maggot

கூடியதாயிருக்கின்றது. வடபகுதி வெங்காயம் தென்னிலங்கை சந்தைகளில் குறிப்பாக டம்புள்ள சந்தைகளில் கொடிகட்டிப் பறக்க நினைத்திருக்கையில் பேரிடியாக வெளிநாட்டிலிருந்து சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் உள்ளூரிலேயே வெங்காயம் கிலோவுக்கு ஐம்பது ரூபாயாக தற்போது விற்பனை செய்யப்படுகிறது. விலைத் தளம்பலை சரிசெய்யும் நோக்கினை வெளிநாட்டு வெங்காய இறக்குமதி கொண்டிருந்தாலும் செய்கை செய்தவருக்கு அது பேரிடிதான்!

இந்த நிலையில் திரும்பவும் நல்ல விலைக்கு ஏறும்வரை வெங்காயத்தை கத்தை கட்டி சேமித்து வைக்கவே விரும்புவார்கள். கத்தை கட்டி சேமித்து வைப்பதில் வெங்காயக்குமிழ் அழுகுதல் என்றுமே பிரச்சினையாகவே உள்ளது. இதுபற்றி பல விவசாயிகள் எழுதிய மடல்களின் பிரகாரம் சேமிப்பின் போது குமிழ் அழுகுதலை மையப்படுத்தி அதனை ஏற்படுத்துகின்ற வெங்காயப் புழு பற்றியும் குமிழ் அழுகலுக்கான பூஞ்சணங்கள் பற்றியும் இக் கட்டுரை தொடர்ந்து ஆராய்கின்றது.

**சேமிப்பின்போது வெங்காயம் ஏன் அழுகுகின்றது?**

வெங்காயத்திற்கும் நீருக்கும் நேரடித் தொடர்புண்டு. தேவையான நீரின்றேல் வெங்காயக் குமிழ் விருத்தியடையாது. ஆனால் நீரினளவு அதிகரித்தாலும் குமிழ்

படி அறுவடையின் பின் 20-30°C இல் 70% ஈரப்பதனில் 12-24 மணித்தியாலங்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். இவ்வாறான வெப்பநிலையில் குமிழை வைத்திருப்பதனால் கழுத்தழுகல் (Neck rot) பூச்சி மற்றும் பூஞ்சணத் தொற்று ஏற்படுவதனை தடுத்திட முடியும்.

வெங்காயத்தில் அழுகலை ஏற்படுத்தும் பூஞ்சணங்களுக்கு எமது வெப்பநிலை உகந்ததாக இருக்கும். அத்துடன் வெங்காயப் புழுவினை விருத்தியடைய விடாது பார்ப்பது முக்கியம். கபில நிறமுடைய நிறைவுடலி இலையான் வெங்காயத்தாளில் முட்டையிட்டு அந்த முட்டையிலிருந்து வெளிவரும் புழு வெள்ளையானதாகவும் வெங்காயத்தில் சேதத்தை ஏற்படுத்தி விட்டு கூட்டுப்புழுவாக மண்ணிலுள்ள சருகுகள் மற்றும் மண்ணினுள் கூட்டுப்புழுவாகும். சிலவேளைகளில் குடம்பி உறங்கு நிலையிலிருந்து பின் நிறைவுடலியாக உருமாறி வாழ்க்கை வட்டத்தை பூரணப்படுத்தும். இதனது வாழ்க்கை வட்டம் 45-65 நாட்களாகும்.



Onion Maggot Damage

*பயிர் குட்டையாகுதல் அல்லது வாடுதல் ஆகியன வெங்காயப்புழுவினதும் சேதத்தின் முக்கியமான ஆரம்ப அறிகுறிகளாகும். எந்தவகை வெங்காய இனமும் இவ்வாறான குமிழ்புழுவின் தாக்கத்திற்குள்ளாக வாய்ப்புண்டு.*

அறுவடையின் போது வெங்காய புழுவின் தாக்கத்திற்குட்பட்ட குமிழ்களை கத்தையாக

குமிழில் இருந்து அவை வளர்ச்சியடைந்து பெருக வாய்ப்பாகி விடுகின்றது.

அறுவடை செய்யும்போது வெங்காயக் குமிழில் புழுவின் தாக்கம் அதிகமாக தென்பட்டால் அதனை சேமிப்பதற்காகப் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் இப்புழுவிற்காக பெந்தியோன் EC 500g/ லீ அல்லது கார்பரில் 85% wp ஆகிய பூச்சிநாசினிகளை விசிறலாம். நன்றாக உணர்த்தப்பட்ட வெங்காயக் குமிழ் ஐதாக அடுக்கிவைக்கப்பட்டு காற்றோட்டமான இடத்தில் வைக்கப்படும்போது இம்மாதிரியான குமிழ் புழுவினை கட்டுப்படுத்தலாம் அல்லது தவிர்க்கலாம்.

**குமிழ் அழுகலை ஏற்படுத்தும் பூஞ்சணங்கள்**

சேமிப்பின்போது வெங்காயக் குமிழில் அழுகலை ஏற்படுத்துவதில் போறைறிசு, அஸ்பேஜில்லசு, பெனிசிலியம் ஆகிய பூஞ்சணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஈரலிப்பு அதிகமாகவும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தினுடைய ஈரப்பதன் அதிகமாகவும் வெங்காயக் கத்தைகள் நெருக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும் இப் பூஞ்சணங்களின் பெருக்கம் அதிகரித்திருக்கும்.

**வேதாளன் இன வெங்காயத்திற்கு பீடை எதிர்ப்பு சக்தி குறைவு.** பொதுவாகவே சின்ன வெங்காயம் அளவில் சிறிதாக இருக்கும் போதே அதிலுள்ள காரத்தன்மை அதிகமாக இருக்கும். கடுகு சிறிதாயினும் காரம் பெரிது அல்லவா. எமது தேவைக்கேற்ப சின்ன வெங்காயம் ஊதிப்பெருத்து பெரிய வெங்காயத்தின் அளவுக்கு வந்து விட்டது. பார்க்க குளிர்ச்சியாகவும் வெட்ட இலகுவாக இருந்தாலும் அதிலுள்ள பீடை எதிர்ப்பு திறன் நலிவடைந்து விட்டது. ஒருவர் மொழு மொழுவென ஊதிப் பருத்துக் கொண்டே போகிறார் என்றால் அவருக்கு நோய் பிடித்துவிட்டது என்றே பொருள் என கூறுவார்கள் அல்லவா. அதே கதைதான் இங்கேயும் பொருத்தம்.

வெங்காயத்தை செய்கை செய்யும் போதும் அறுவடை செய்து சேமிக்கும் போதும் பூச்சி பீடைகளினதும் நோய்களினதும் விருத்திக்கு உகந்ததல்லாத சூழலை ஏற்படுத்தும் வரை இவற்றிலிருந்து மீள்வது கடினமாகவே இருக்கும். மாறிமாறி பீடை நாசினிகளை விசிறுவதனால் மட்டும் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நினைவில் கொள்வோமா?

(தொடரும்)






உடுப்பிட்டிக் கொத்தணி முன்பள்ளிகளின் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் திருமதி செல்வராணி தில்லைநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் உரையாற்றுவதையும் உடுப்பிட்டிக் கொத்தணி மாணவர்களின் கிருஷ்ணலீலை நடனத்தையும் காவடியாட்டத்தையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் நிருபர்)

# கொலம்பிய தலைநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 9 பேர் காயம்

(கொழும்பு)

கொலம்பிய தலைநகர் பொகொட்டாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் பொகொட்டாவில் காணப்படும் வாகனத் தரிப்பிடமொன்றில் 50 கிலோ கிராமிற்கும் அதிகமாக வெடிபொருட்களைக் கொண்ட சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் பல கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் ஒன்றரை வருடங்களின் பின்னர் கொலம்பிய தலைநகரில் முதல் தடவையாக குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கொலம்பிய வானொலிச் சேவை ஒன்று அமைந்துள்ள கட்டடத்திற்கு அருகாமையில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எதனை இலக்காக வைத்து யார் இந்தத் தாக்குதல்களை மேற் கொண்டார்கள் என்பது இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் ஓர் பயங்கரவாத நடவடிக்கை எனவும் பயங்கரவாதத்திற்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். குண்டு வெடிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அதற்கு அருகாமையில் பேருந்தில் பயணித்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். (6-2)

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களின் கப்பலைக் கண்காணிக்கும் கனேடிய கப்பல்கள்

(கொழும்பு)

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிக்கொண்டு கனடா நோக்கிப் பயணிக்கும் எம்.வீ. சன் சீ கப்பல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பத்து கனேடிய கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. குறித்த பத்து கப்பல்களும் ஏற்கனவே கனேடிய கரையிலிருந்து புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 200முதல் 500 வரையிலான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த கப்பலில் பயணிக்கலாம் என கனடா சந்தேகம் வெளியிட்டுள்ளது. தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய கப்பல் தற்போது கனேடிய பொருளாதாரக் கடலை அண்மித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனேடிய எல்லைப் பகுதிக்குள் குறித்த கப்பல் பிரவேசித்தல் புகலிடக் கோரிக்கையாளர்களின் நிலைமைகள் குறித்து அதிகாரிகள் ஆராய்வார்கள் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக்டோவ்ஸ் தெரிவித்துள்ளார். இந்தக் கப்பலில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருக்கக் கூடும் என நம்புவதற்கான காரணிகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுத்து வைப்பதற்கு ஏற்கனவே கிழக்கு வான் கூவாரில் இரண்டு முகாம்கள் ஆயத்தப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)


# எமது சமூகத்தை நல்ல நிலைக்கு கொண்டுவர அனைவரும் முன்வருதல் வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

சமூகத்தை நல்லதொரு நிலைக்கு கொண்டு வர நீங்கள் அனைவரும் எங்களுடன் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார். கடந்த 11 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பக் கல்வி மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலைத்திறன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் உரையாற்றுகையில், இங்கு ஆசிரியர்கள் கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டு இருக்கின்றீர்கள் உங்களது திறமைகளை வெளிக்கொண்டு வரும் நிகழ்வே இதுவாகும். இங்கு சில மாதங்களுக்கு முன்பு சில கசப்பான சம்பவங்கள் இடம்பெற்று தற்பொழுது ஒரு சுமுகமான நிலைக்கு வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு தான் தயாராகவுள்ளதாகவும்; நீங்கள் அனைவரும் வன்னிக்குச் சென்று உங்கள் சேவையைச் செய்வீர்கள் என நம்புகின்றேன். அங்கு கல்வி நிலைமைகள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த நீங்கள் அனைவரும் எங்களுடன் இணைந்து உழைக்க முன்வர வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து ஆரம்பக் கல்வி மன்றம் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் சந்திரகுமாரும் ஈ.பி.டி.பியின் வலிகாம இணைப்பாளர் ஜீவனும் வழங்கிக் கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. பேர்னாட், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் கணபதிப்பிள்ளை கலாநிதி செ. திருநாவுக்கரசர் உட்பட பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (6-2)


கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்



பெருந்தலைவர் தம்பையா சிதம்பரப்பிள்ளை
ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பித்தலும்
"சமதர்மக் கூட்டுறவுச் சிற்பி" நூல் வெளியீடும்

இடம் : நெல்லை முருகன் திருமண மண்டபம், நெல்லியடி.
காலம் : 14.08.2010 சனிக்கிழமை
காலை 9.30 மணி

தலைவர் : திரு. க. சிதம்பரநாதன் அவர்கள்
(தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்)
பிரதம விருந்தினர் : திரு.ந.பாஸ்கரன் J.P அவர்கள்
(பிரபல சமூக சேவையாளர்)
திருமதி இந்திராணி பாஸ்கரன் தம்பதிகள்
சிறப்பு விருந்தினர்கள் : திரு வி.கு. அருந்தவநாதன் அவர்கள்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் – யாழ்ப்பாணம்)
திரு.சி.சத்தியசீலன் அவர்கள் (பிரதேச செயலர் – கரவெட்டி)
திரு.இரா.வரதீஸ்வரன் அவர்கள் (பிரதேச செயலர் – பருத்தித்துறை)
திரு.செ.ஸ்ரீநிவாசன் அவர்கள் (பிரதேச செயலர் – தென்மராட்சி)
திரு. ஐ. சிறீ ரங்கேஸ்வரன் அவர்கள்
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – வடமராட்சிப் பொறுப்பாளர்)
திரு.வ. செல்வராசா அவர்கள் (கல்விப் பணிப்பாளர் – வடமராட்சி வலயம்)
கௌரவ விருந்தினர்கள் : திரு.வே.குலநாயகம் அவர்கள்
(பிரதேச சபை செயலாளர் – கரவெட்டி)
திரு.ச.சந்திரயோகன் அவர்கள்
(பிரதேச சபை செயலாளர் – பருத்தித்துறை)
திரு.வே.சிவராஜலிங்கம் அவர்கள்
(பிரதேச சபை செயலாளர் – சாவகச்சேரி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றம், கட்டைவேலி நெல்லியடி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்


# நல்லிணக்க ஆணைக்குழு இன்று வவுனியாவில் கூடவுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு இன்றும் நாளையும் வவுனியாவில் கூடவுள்ளது.

இன்று காலை வவுனியா மாவட்ட செயலகத்திலும் பிற்பகல் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாளை நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் குழுவினர் செட்டிக்குளம் நிவாரணக் கிராமத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியம் அளிக்க விரும்பும் பொதுமக்கள் சாட்சியமளிக்கலாம் என வவுனியா மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (6-2)

# ஓமானில் கொள்ளைச் சம்பவம்; 4 இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நான்கு இலங்கையர்களை ஓமான் நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓமானுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்ற நான்கு இலங்கையர்கள் பணத்தைக் களவாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓமானின் மஸ்கட் என்ற பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இங்கு கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களில் மூன்று பேர் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது.மேற்குறித்த இலங்கையர்கள் 19 ஆயிரம் ஓமான் ரியால்களை களவாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் குறித்த வீட்டில் பணியாற்றியவர் எனக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

# விசேட கூட்டங்கள்

இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றிய எக்காளம் முழங்கப் போகிறது. விசேட கூட்டங்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 4 மணிக்கு 104, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள பெத்தேலில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைப் போதகர் ஜோன் கிற்றோ பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். (6)

# யாழ்.தனியார் பஸ்சேவைக்கு புதிய அனுமதிப்பத்திர முறை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டம்

(கொழும்பு)

யாழ்.கொழும்பு தனியார் பேருந்து சேவை அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதில் புதிய நடைமுறையைப் பின்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மதவாச்சி ,வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, கந்தானை ஆகிய பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபட்ட 83 தனியார் பேருந்துகள் இனங்காணப்பட்டுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி - I இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தொழில்நுட்ப/கணனி நுட்ப அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30 ஆம்திகதிக்கு முன்னர் தகவல் தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு என்று குறிப்பிட்டு இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஹேமாஸ் கட்டடம், கொழும்பு -1 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்படுகிறது.

✠✠✠

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் இலங்கை அச்சிடல் சேவை வகுப்பு -III தரம் III ஐச் சேர்ந்த கணனி மய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (தமிழ் / ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ்மொழி/ ஆங்கிலமொழி, கணிதம்/எண்கணிதம் உட்பட ஆறுபாடங்களில் 5 திறமைச்சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்மொழி , ஆங்கிலமொழி பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தமிழ், ஆங்கிலப் பாடங்களில் தொடர்பில் க.பொ.த(உ/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து, அப்பாடங்கள் தொடர்பில் க.பொ.த (சா/த) பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அழைக்கப்படுவார்கள். இப்பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படுவர். அத்துடன் சித்திபெறுவதற்கு 40% அல்லது அதற்கு கூடிய புள்ளிகளைப் பெறவேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத்திணைக்களம், (அஞ்சல் பெட்டி 507) இல.118,டாக்டர் டெனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு -8, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

✠✠✠

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சினால் இலங்கை சிறைச்சாலை திணைக்களத்திற்கு உதவி சிறைச்சாலை கண்காணிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரி ஒருவராக அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம்திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், (ஏற்பாடு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை) பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்படுகிறது.

✠✠✠

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் I, II தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை நாட்டின் சகல மாவட்டங்களிலும் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்படுகிறது.

இவ் விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக தகவலை 2010.08.13 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் வந்தோ பார்வையிடலாம்.(6-4)


# ஜனாதிபதி பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்

நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் நிலவும் நெருக்கடிகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாட்களில் பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய உயர்கல்வித்துறை அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். இதனடிப்படையில் பல்கலைக்கழகங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அடுத்த வரவு- செலவு திட்டத்தின் போது பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் மொழிப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவுள்ளது. இதற்காக பல்கலைக்கழகங்களுக்கு மொழிபெயர்ப்பாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார். (6-2)

## நல்லைக் கந்தன் பாமாலை



நல்லூர் கந்தசுவாமி ஆலய
மஹோற்சவத்தை ஒட்டி 'வலம்புரி'
வருடம் தோறும் வெளியிடும்
'நல்லைக்கந்தன் பாமாலை'
பகுதிக்கு கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
உங்கள் கவிதைகளை
நல்லைக் கந்தன் பாமாலை
"வலம்புரி"
இல.3, இரண்டாம் ஒழுங்கை
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

குறிப்பு:- கவிதைகள் எட்டு (8) வரிகளுக்கு மேற்படாமல் அமைவது சிறப்பானது.

# வடக்கு -கிழக்கிலுள்ள 50 பாலங்களை புனரமைப்பதற்கு பிரான்ஸ் இணக்கம்

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பல்வேறு துறைகளின் ஊடாக ஒத்துழைப்பு வழங்க பிரான்ஸ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரெஞ் தூதுவர் கிறிஸ்ரீன் றொபின்சன் பிரதமர் டி.எம். ஜெயரட்ணவைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல இடங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பிரான்ஸ் அரசாங் கம் உதவி வருகின்றது.

இதில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மின்சாரம்,பெருந் தெருக்கள் மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏ-15 வீதிக்குக் குறுக்காக பிரான்ஸ் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் புதிதாக 5 பாலங்கள் அமைக்கப்படுகின்றன. அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பயன்படுத்த முடியாத பாரிய 50 பாலங்களை துரிதமாக திருத்தி அமைக்கும் நடவடிக்கைக்கு பிரான்ஸ் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. (6)

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து வடமாகாண ஆளுநர் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஆளுநர் முஸ்லிம்களின் குறைகளை கேட்டறிந்தார். இதில் யாழ்.மாவட்ட முஸ்லிம் மக்களின் சார்பில் மாநகர சபை உறுப்பினர் சார்பில் மௌலவி சுபியான் ஆளுநரிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தார்.

☼ யாழ்.மாவட்டத்தில் அழிந்திருக்கும் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பி அங்கு முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

☼ முஸ்லிம் மக்களின் பொருளாதாரமேம்பாடுகள் மற்றும் வாழ்வாதார விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

☼ யாழ். மாவட்டத்திலுள்ள பழைய இரும்புகளை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதியை பெற்றுத்தர வேண்டும்.

☼ சுன்னாகத்தில் உள்ள சந்தையில் முஸ்லிம்களுக்கான கடையை மீண்டும் பெற்றுத்தர வேண்டும்.

☼ ஒஸ்மானியாக் கல்லூரியில் விஞ்ஞான கூடம், நூலகம், தளபாடங்கள் ஆகிய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை செவிமடுத்த ஆளுநர், மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு 8 பைக்கற் சீமெந்து வழங்குவதாகவும் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் போது அதில் முஸ்லிம்களுக்கும் பரிசீலிக்கப்பட்டு வீடுகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.


அத்துடன் பழைய இரும்புகளை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு செயலாளரிடம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

மேலும் சுன்னாகச் சந்தையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகளை மீண்டும் பெறுவதாயின் தகுந்த ஆதாரத்துடன் பிரதேச செயலாளரிடம் கையளித்து அவர் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வார் என உறுதியளித்தார். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு நூலகம், விஞ்ஞான ஆய்வு கூட தளபாடங்கள் என்பவற்றை விரைவில் பெற்றுத் தருவதாகவும் கல்லூரிக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளரை நேரில் சென்று அங்குள்ள குறைகளைக் கேட்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் பணிப் புரை வழங்கினார்.

இதன்போது மீள்குடியேற்றப்பட்ட 16 குடும்ப தலைவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் ஏனையவர்களுக்கு நுளம்பு வலைகளும் பால்மா பைக்கற்றுக்களையும் வழங்கினார்.அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 167 முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், திட்டப்பணிப்பாளர் பிரதீபன், யாழ். மாநகர சபை உறுப்பினர் சுபியான் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-4)

பெருமையோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் புகழ் பூத்த மைந்தர்களில் ஒருவரும், கல்லூரியின் வளர்ச்சியில் சிரத்தையோடு செயற்பட்டவரும், பழைய மாணவர் சங்கப் போஷகருமான

உயர்திரு
கந்தையா கணேஷ்

அவர்கள் அரச சேவையில் ஐம்பதாம் ஆண்டில் கால்பதித்து மூன்று மாவட்டங்களின் அரச அதிபராகச் சேவையாற்றிய பெருமையோடு இளைப்பாறிய இவ்வேளையில் கல்லூரிச் சமூகம் சார்பில் பெருமையோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இளைப்பாற்றுக் காலம் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட நிறைந்த வாழ்வாக அமைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்-வல்வெட்டித்துறை.
பழைய மாணவர் சங்கம்-கொழும்பு.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(2165)

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச் செல்லும். -கவி தாம்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மேர்வினுக்குச் சனிமாற்றம் என்றால் மரத்தில் கட்டப்பட்டவருக்கு என்ன மாற்றம்?

அமைச்சுப் பதவியையும் கட்சியின் உறுப்பினர் பதவியையும் இழந்த மேர்வின் சில்வா தனக்குச் சனி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாகவே பதவியிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியை எனது நண்பர் ஒருவருக்குத் தொலைபேசியில் கூறினேன். அதற்கு அவர்சோதிடத்தில் அப்படியேதும் இல்லைஎன்றார்.

எனக்கு எதுவும் புரியவில்லை. சனி மாற்றம் தனக்குச் சரியில்லை என்று மேர்வின் சில்வா கூறியதற்கும் சோதிடத்தில் அப்படியேதும் இல்லை என்று எனது நண்பர் கூறியதற்கும் என்ன தொடர்பு...?

இந்த குழப்பத்தைத் தெளிவுபடுத்துவதற்காக மீண்டும் தெளிவாகச் சொல்லுங்கள் என நண்பரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் கிரகங்களின் மாற்றத்தால் மற்றவர்களுக்குச் சாதக பாதக விளைவுகள் ஏற்படுமேயன்றி அந்தக் கிரகத்திற்கு எதுவும் நடக்காது என்றார்.

அவரின் இந்தப் பதில் என்னை மேலும் குழப்பத்திற்கு ஆளாக்கி விட, அதை விடுங்கள், பதவியிழந்த மேர்வின் சில்வாவுக்குச் சனி மாற்றம் சரியில்லை எனில்,

மேர்வின் சில்வாவால் மரத்தில் கட்டப்பட்ட அந்த அரச பணியாளருக்கு எந்தக் கிரகம் கூடாது என்று கேட்டேன்.

அதற்கு நண்பர் கூறினார், எல்லாம் சனி பார்வையின் விளையாட்டுத்தான் என்றார். எல்லாமே குழப்பம். சோதிடத்தில் போதிய அறிவின்மையால் நண்பரின் விளக்கத்தை புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கில்லை. இருந்தாலும் அதை விடுவதாக இல்லை.

மேர்வினுக்கு சனிமாற்றம் சரியில்லை. மேர்வினால் மரத்தில் கட்டப்பட்டவருக்கு சனி பார்வை சரியில்லை என்றால் எப்படி அதை விட்டு விடுவது?

தொலைபேசி காசை உறிஞ்சிக் குடித்தாலும் பரவாயில்லை, விளக்கம் கேட்டேன்.

'கெட்டவன் கெட்டால் கிட்டிடும் யோகம்' என்று சோதிடம் கூறுகின்றது. கெட்ட கிரகங்கள் கெட்டுப் போக வேண்டும். அப்போதுதான் சாதகக்காரனுக்கு 'சாதகம்' ஏற்படும்.

மாறாக கெட்ட கிரகம் நல்ல இடத்தில் வலுப்பெற்று-ஆட்சி பெற்று-பதவி பெற்று இருக்குமாயின், சாதகக்காரனுக்கு 'பாதகம்' ஏற்படும் என்றார்.

ஐயா உங்கள் விளக்கம் போதும் இனி வேண்டாம். ஒன்றை மட்டும் சொல்லுங்கள் மேர்வின் சில்வாவுக்கும், மரத்தில் கட்டப்பட்டவருக்கும் எதிர்காலம் எப்படியிருக்கும்? அதைச் சொன்னால் போதும் என்றேன்.

திருவிளையாடலில் சிவாஜி கணேசன் சிரித்ததுபோல நண்பர் சிரித்தார். அதைச் சொல்வதற்கு அடுத்த பொதுத் தேர்தல் வர வேண்டும் என்றார். பொதுத் தேர்தல் வந்தால் என்ன நடக்கும்? மறுத்தான் கொடுத்தேன்.

கட்டியவர் கட்டுப் பணம் இழப்பார். கட்டப்பட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார் என்றார் நண்பர்.

ஆ...! கடவுளே! எண்ணெய் கேட்ட நடிகர் வடிவேலுவிடம் மாட்டுப்பட்ட கடைக்காரரின் நிலையில் இப்போது நான்.

மௌனம் காத்தேன். அட! குழம்பாதீர்கள். அடுத்த தேர்தலில் மேர்வின் சில்வாவால் மரத்தில் கட்டப்பட்ட அரச பணியாளர் போட்டியிடுவார். அவருக்கு நிச்சயம் எம்.பி. பதவி கிடைக்கும்.

மரத்தில் கட்டிய மேர்வின் சில்வா அடுத்த தேர்தலில் உள்ளதையும் இழப்பார் என்று கூறி விட்டுத் தொலைபேசி இணைப்பைத் துண்டித்தார் நண்பர். அவ்வளவுதான் தலைவிறைப்புத் தாங்க முடியவில்லை.

# கொலம்பியாக் கடற்பரப்பை சன் சீ கப்பல் சென்றடைந்துள்ளது

(கொழும்பு)

சுமார் 490 இலங்கை அகதிகளை ஏற்றிய எம்.வி. சன் சீ கப்பல் பிரிட்டிஷ் கொலம்பியாக் கடற்பரப்பை அடைந்துள்ளதாகக் கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனேடியப் பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் விக் ரோவிஸ் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இந்தக் கப்பல் நேற்று முன்தினம் காலை அந் நாட்டுக் கடற்படையினர் மற்றும் கரையோரப் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கனேடிய அரசாங்க அதிகாரிகளின் தகவல்படி கப்பல் நேற்று முன்தினம் மாலை அளவிலேயே கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் பெண்களும் குழந்தைகளும் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் கப்பலில் உள்ள ஒருவர் மாத்திரம் சுகவீனமுற்றுள்ளதாக முன்னர் வெளியான தகவலைப் போன்று எவரும் மரணமாகவில்லை எனவும் கனேடிய எல்லைப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இலங்கை அகதிகளின் வருகையால் ஆத்திரமடைந்துள்ள கனடா மக்கள்

இலங்கையில் இருந்து 500க்கும் அதிகமான அகதிகள் கனடாவின் வன்கூவர் நோக்கிச் சென்றுள்ள நிலையில், கனேடிய விக்டோரியா மாநிலத்தின் பொதுமக்கள் ஆத்திரமடைந்துள்ளதாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கெய்த் மார்டின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பல்வேறு முறைப்பாட்டு தொலைபேசி அழைப்புகள் தமக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அதிக அளவிலான தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது காரியாலய தொலைபேசிகளை குரல் பதிவு (வொய்ஸ் மெயில்) முறையில் செயற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் கனடாவுக்கு வருவதையிட்டு விக்டோரியா மாநில மக்கள் விருப்பம் கொள்ளவில்லை எனவும், ஏற்கனவே சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் தமிழர்களுக்கு அரசாங்கத்தினால் பொது சேவைகள் வழங்கப்படுவது தமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என விக்டோரியா மாநில மக்கள் கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் முன்னர் 200 அகதிகள் எனக் கூறப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை தற்போது 500 என்பதை ஒட்டாவா நிர்வாகம் உறுதி செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கட்டைக்காடு கிறிஸ்தவ தேவாலய உற்சவத்திற்கு செல்ல படையினர் அனுமதி

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிறிஸ்தவ தேவால யத்திற்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு வருவதற்கு பக்தர்களுக்கு படையினர் தற்போது அனுமதி வழங்கியுள்ளனர். இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள இவ் ஆலயத்தின் உற்சவத்திற்கு பக்தர்கள் அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

மேலும் இவ் ஆலயத்திற்கு மருதங்கேணி பகுதியிலுள்ள சிவில் அலுவலகத்தின் உதவியுடன் பக்தர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளதால், வழிபாடுகளில்கலந்து கொள்ள விரும்பும் மக்களை இன்று காலை 9 மணிக்கு முன்னர் நாசார் பகுதியில் ஒன்றுகூடுமாறு ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவ் ஆலயத்திற்கு 2008 ஆம் ஆண்டு வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் பின்பு முதல் தடவையாக பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-2-43)

## நாமல் ராஜபக்ஷவினால் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(பூநகரி)

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ பூநகரி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 10 இற்கும் மேற்பட்ட பாடசாலைக்கு சென்று கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராசா, பூநகரிப் பிரதேச செயலர் ஏ.எஸ். வசந்த குமார், கோட்டக் கல்வி அலுவலர் தர்மரத்தினம், கரைச்சி கோட்டக் கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் பூநகரி அத்தாய் தாளக்குளம் பிள்ளையார் ஆலயம், பள்ளிக்குடா முருகமூர்த்தி ஆலயம், ஞானிமடம் கொட்டிலுப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார். (6)

## பீரிஸ், கருணா, மிலிந்த போன்றோரையும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரிக்க வேண்டும்

### ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் மற்றும் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரிடமும் விசாரணை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சமாதான முயற்சிகளில் இவர்கள் முக்கிய பாத்திரம் வகித்தவர்கள் என்பதால் சமாதான முயற்சிகள் குறித்த நடுநிலையான அவதானிப்பை பெற்றுக்கொள்வதற்கு இவர்களிடம் விசாரணை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி நாடளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார் .

இன்றைய நிலையில் ஐ.தே.கவை தாக்குவதற்கும் சமாதான முயற்சிகளை சிறுமைப்படுத்துவதற்கு ஆணைக் குழு பயன்படுத்தப்படுவதாக தோன்றுகிறது.

இதைவிட அக்காலத்தில் சமாதான முயற்சிகளில் தீவிரமாக செயற்பட்டவர்களான மேற்படி அங்கத்தவர்களை ஆணைக்குழு அழைத்து விசாரிக்கவேண்டும் என ரவி கருணாநாயக்க கூறியுள்ளார். (6-2)

## உதைப்பந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணி கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டப் போட்டியில், இன்று மாலை 4.30 மணிக்கு சக்கோட்டை சென்சேவியர் அணியை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (6-2-24)

## மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வதற்கு மேலும் 8 இடங்கள்

மன்னார் வலயத்தில் எண்ணெய் அகழும் நடவடிக்கைகளுக்காக மேலும் எட்டு இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக கனிய வள அமைச்சு தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மன்னாரில் எண்ணெய் அகழ்வதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கட்டங்களாக இந்த எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் ஒன்று இந்திய கேன் நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

## சுவாமி விவேகானந்தரின் ஆசிமொழிகள்



இறைவனைப் பிரார்த்தனை செய்வதை வழக்கமாக்குங்கள். வழிபாட்டினால் நம்முடைய நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. தன்னுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் நம்முடைய விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

பிறருடைய நன்மைக்காக பாடுபடுவதே தவம். கர்மயோகி என்பவன் தாம் செய்யும் பணிகள் அனைத்தையுமே தவமாகச் செய்வான்.தவம் செய்யச் செய்ய மனத்தூய்மை உண்டாகும்.மனத்தூய்மைஅடைந்தவன்இறைக்காட்சி பெறுவான்.மதம் என்பது அதன் கோட்பாடுகளில் இல்லை. மதத்தின் சாரம் அதன் செயன் முறையில் தான் இருக்கிறது.

நன்மை செய்வது, நல்லவனாக வாழ்வது இதுதான் மதத்தின் முழுப்பரிமாணம்.இலட்சிய மனிதனின் நோக்கம் சமுதாயத்திற்கு உதவுவதாகவும் ,மறு உலகிற்கு வழிகாட்டுவதாகவும், அதே சமயத்தில் மரணத்தைக் கண்டு கலங்காத ஆயத்த நிலையிலும் இருக்கும்.சோம்பலோ,பொறாமையோ,ஆணவமோ,தீயகுணம் எது இருந்தாலும் அதைத் தூர எறிந்து விட்டு ஆர்வத்துடன் செயற்களத்தில் வலிமையோடு நின்று பணியாற்றுங்கள்.

## மனித மூளையைப் போன்ற மைக்ரோசிப் கண்டுபிடிப்பு

மனித மூளை செயல்படுவது போலவே இயங்கும் 'மைக்ரோ சிப்' ஒன்றை கனடா கல்கரி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். மனித மூளையில் உள்ள திசுக்களின் தகவல் தொடர்பு பற்றிய விடயங்களை இந்த 'சிப்' மிகச்சரியாக கண்டறிந்து இயங்குகிறது. மூளை செல்களுக்கு இடையிலான இரசாயன மற்றும் மின்காந்த அதிர்வுகளையும் புரிந்து கொள்கிறது. ஏறத்தாழ மூளை போலவே செயல்படுவதால் 'நியுரோ சிப்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

மூளை செயலிழப்பதால் அல்சீமர் மற்றும் பர்கின்கன் போன்ற நோய்கள் தோன்றுகின்றன. அத்தகைய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு இந்த 'நியுரோ சிப்' ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று கருதப்படுகிறது. (6-2)

# இந்தியா, பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவதற்கு பயங்கரவாதிகள் சதி!

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் பெரிய அளவில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்த சர்வதேச எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கர்கள் அதிகம் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்தியா , பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகளை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் எனவே, அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் இந்த நாடுகளில் பணி நிமித்தமாக தங்கியிருக்கும் அமெரிக்க அரசு அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் நட்சத்திர விடுதிகள் , புகையிரதங்கள் மற்றும் புகையிரத நிலையங்கள்,சந்தைகள், சினிமா திரையரங்கு மற்றும் ரெஸ்டாரன்டுகள் ஆகியவற்றை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்கக் கூடும் என அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் வாகனத்தில் வெடிகுண்டு வைத்தோ ரொக்கெட் ஏவியோ தாக்குதல் நடத்தலாம் என்றும் அமெரிக்கர்கள் கடத்தப்படலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-2)

## விசா கட்டண உயர்வு குறித்து அமெரிக்கா மறுபரிசீலனை

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு செல்வதற்கான 'விசா' கட்டணத்தை அந்த நாட்டு அரசு சமீபத்தில் உயர்த்த முடிவு செய்துள்ளது. அதன்படி 'எச்-1பி' மற்றும் 'எல்-1' ஆகிய விசாக்களுக்கான கட்டணம் உயருகிறது.

இதனால், அமெரிக்காவில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பணியாற்றுவதற்காக இந்தியாவிலிருந்து கணனி நிபுணர்களை அனுப்பி வைக்கும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு கூடுதல் சுமை ஏற்பட்டுள்ளது.

விப்ரோ, டாடா, இன்போசிஸ், சத்யம் போன்ற நிறுவனங்கள் ஆண்டுக்கு ஆயிரத்து 250 கோடி கூடுதலாக செலவு செய்ய வேண்டி நிலைமை உருவாகி இருக்கிறது. எனவே இந்தியா, அமெரிக்கா இடையிலான பொருளாதார உறவில் சிக்கல் நிலவுவதால், விசா கட்டண உயர்வை மறு பரிசீலனை செய்ய அமெரிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுதொர்டர்பாக, அமெரிக்க வர்த்தக நிறுவன தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சு நடத்தவுள்ளனர். (6-2)

## இலங்கை - இந்திய மீனவர்கள் தமிழகத்தில் பேச்சுவார்த்தை

இந்திய- இலங்கை மீனவர்கள் அடுத்த சில நாட்களில் சந்தித்து பேசவுள்ளனர். இருதரப்பினரும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

நிரபராதி மீனவர்கள் கூட்டமைப்பின் சார்பில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டம் இராமநாதபுரம் உட்பட தமிழகத்தின் நான்கு மாவட்டங்களில் நடைபெறவுள்ளது எனவும் தமிழ் நாடு விசைப் படகு மீனவர்கள் நலச்சங்கத்தின் பொதுச் செயலர் போஸ் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 25 இலங்கை மீனவப் பிரதிநிதிகள் இம்மாதம் 16 ஆம் திகதி இராமேஸ்வரம் வந்தடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருதரப்பு மீனவர்களுக்கும் இந்திய- இலங்கை கடற்பரப்பில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது எனவும் தங்களுக்குள் கூட்டம் நடைபெற்ற பின்பு அதன் அடிப்படையில் இருநாட்டு அரசுகளை பேசவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-2)

## பின்லேடனின் சமையல்காரராக பணியாற்றியவருக்கு 14 ஆண்டுகள் சிறை

### அமெ. இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

சர்வதேச பயங்கரவாதியாக கருதப்படும் ஒசாமா பின்லேடனுக்கு சமையல்காரராக இருந்த இப்ராகிம் அல் குவாசி வயது(50) என்பவர் அமெரிக்க கடற்படை தளமான குவாண்டனாமோ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சூடானைச் சேர்ந்த அவர் கடந்த 8 ஆண்டுகளாக அந்த சிறையில் இருக்கிறார். அவர் மீதான விசாரணை அமெரிக்க இராணுவ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் தனது குற்றங்களை இப்ராகிம் ஒப்புக்கொண்டார்.

அப்போது அவர் சூடான் நாட்டில் பின்லேடனை நான் சந்தித்தேன். பின்னர் அவருடன் ஆப்கானிஸ்தான் சென்று அங்கு அவருக்கு சமையல்காரராக பணியாற்றினேன்.

சில சமயங்களில் அவருக்கு சாரதியாகவும் இருந்துள்ளேன். தோரா போரா மலைப் பகுதியில் நடந்த அமெரிக்க இராணுவத் தாக்குதலில் இருந்து பின்லேடன் தப்பிச்செல்வதற்கு உதவி செய்தேன். ஆனால் எந்தவித தீவிரவாத தாக்குதல்கள் குறித்தும் முன் கூட்டியே எனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

இதையடுத்து இப்ராகிம் அல்குவாசிக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அமெரிக்க இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்ற பின், குவாண்டனாமோ சிறையில் உள்ள ஒருவருக்கு தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். (6-2)

## ரஷ்யாவில் பரவிவரும் காட்டுத்தீயால் அணுக்கதிர்வீச்சு ஏற்படலாம்

### மக்கள் அச்சம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. விளாடிமிர் , வோல்கா , பிரையான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகள் பற்றி எரிகின்றன. உக்ரைன் நாட்டின் எல்லையிலுள்ள பிரையான் ஸ்க் பகுதியில் தான் செர்னோபைல் அணு உலை அமைந்துள்ளது. கடந்த 1986 ஆம் ஆண்டில் செர்னோபைல் அணு உலையின் 4 ஆவது ரியாக்டர் வெடித்தது. அப்போது அணுக் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்ட காடுகளில் தற்போது தீப்பற்றி எரிகிறது. எனவே அணுக்கதிர்வீச்சு ஏற்படலாம் என மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இது தவிர வோல்கா பகுதியில் உள்ள மோர்டோவியா என்ற இடத்தில் உள்ள அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் மிகப்பெரிய சிறைச்சாலை இருக்கிறது. அங்கு சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். காட்டுத்தீ காரணமாக கைதிகளின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. (6-2)

## பல்துலக்காத கணவனிடமிருந்து விவாகரத்துக் கோரும் மனைவி

உத்தரப் பிரதேசம், பாகபத் மாவட்டத்திலுள்ள பரவட் நகரை சேர்ந்தவர் சுனிதா. இவருக்கும் டில்லியை சேர்ந்த லொறி டிரைவர் ரமேஷ் என்பவருக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது. திருமணமாகி சில நாட்களிலேயே கணவன் மனைவிக்குள் பூசல் எழுந்தது. ரமேஷ் உடலை சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை என்று சுனிதா குற்றம் சாட்டினார். மேலும் கணவனை திருத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை எனவே ரமேஷிடமிருந்து விவாகரத்து பெற்று தர வேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் சுனிதா புகார் வழங்கியுள்ளார்.

அப்போது பொலிசாரிடம் சுனிதா கூறியதாவது, ரமேஷ் தினமும் பல்துலக்குவதில்லை; உள்ளாடைகளை துவைக்காமல் உடுத்தி கொள்கிறார்.

அழகாக உடை உடுத்திக் கொள் ளுமாறு ரமேஷிடம் தினமும் வற்புறுத்தி னேன். ஆனால், அதை ரமேஷ் பொருட்படுத்தவில்லை. இதனால் எங்களுக்கு இடையில் அடிக்கடி சண்டை, சச்சரவுகள் ஏற்பட் டன.

ரமேஷுடன் வாழ விரும்பாமல் பெற்றோர் வீட்டுக்கு சென்றேன். ஆனால் எனது பெற்றோர் என்னை சமாதானப்படுத்தி ரமேஷுடன் சேர்ந்து வாழும்படி அறிவுரை கூறி அனுப்பிவிட்டனர். ரமேஷை திருத்த முடியாது என எனக்கு தெரிந்துவிட்டது. எனவே அவருடன் சகித்துக்கொண்டு வாழ் நாள் முழுவதும் என்னால் வாழமுடியாது. எனக்கு விவாகரத்து பெற்றுக்கொடுங்கள். இவ்வாறு பொலிசாரிடம் சுனிதா தெரிவித் தார்.

இதையடுத்து கணவன் மனைவி இருவரையும் அழைத்து பொலிசார் ஆற்றுப்படுத்தல் நடத்தினர். இதில் சுமுக முடிவு ஏற்படவில்லை. சுனிதா விவாகரத்து கேட்டு வற்புறுத்தியதால் இந்த வழக்கை கோட்வாலி பொலிஸ் நிலையத்தின் மகளிர் பிரிவுக்கு மாற்றப்பட்டது. விவகாரத்து பெறுவதற்கு மகளிர் பொலிசார் உதவியை சுனிதா நாடியுள்ளார். இந்த நிலையில் மனைவி சுனிதாவை ரமேஷ் சமாதானப்படுத்த முயன்றார். மேலும், மனைவியின் குற்றச்சாட்டுகள் குறித்து பொலிசாரிடம் விளக்கமளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது, நான் லொறி டிரைவராக இருக்கிறேன். என்னுடைய வேலையில் சுனிதா கூறுவதுபோல் அன்றாட பணிகளை செய்ய இயலாது என்றார். இருப்பினும் ரமேஷின் சமாதானத்தை சுனிதா ஏற்கவில்லை. அவர் விவாகரத்து பெறுவதில் உறுதியாக உள்ளார். (6-2)



ஜம்மு காஷ்மீரில் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் லே பகுதியில் தற்காலிகமாக கூடாரம் அமைத்து மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# அதிரடியில் தரங்கவும் வேகத்தில் மலிங்கவும் ஜொலிப்பு நியூசிலாந்து அணியை வீழ்த்தியது இலங்கை அணி

(தம்புள்ள)

தரங்க, சங்கக்கார, சமரவீர ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி மூன்று விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்திய, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் போட்டி தம்புள்ளவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குப்தில் பூச்சியத்துடன் மலிங்கவின் பந்து வீச்சில் கபு கெதரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி முதலாவது ஓவரின் இரண்டாவது பந்தில் இரண்டு ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது.

இந் நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அறிமுக வீரர் வாற்லிங்-ரெய்லர் ஜோடி பொறுப்புடன் ஆடியது. இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 45 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் 16 ஓட்டங்களுடன் மத்யூசின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய வில்லியம்ஸன் வந்தவேகத்தில் பூச்சியத்துடன் மத்யூஸின் பந்து வீச்சில் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்ரைரிஸ் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். இதில் அறிமுக வீரர் வாற்லிங் தனது முதலாவது போட்டியில் 61 பந்துகளில் கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் ஸ்கொட் ஸ்ரைரிஸ் 33 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து ஹேரத்தின் பந்து வீச்சில் மஹேல ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹோப்கின்ஸ் களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வாற்லிங் 68 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்து மத்யூஸின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நதன் மக்குலம் சிறப்பாக ஆட மறுமுனையில் ஹோப்கின்ஸ் 11 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்து வீச்சில் கபுகெதரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்கள் தமது பங்கிற்குக் கைகொடுக்க நியூசிலாந்து அணி 48.1 ஓவர்களில் 192 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் நதன் மக்குலம் 36 ஓட்டங்களையும் சௌத்தி 13, மில்ஸ் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மலிங்க, மத்யூஸ் தலா மூன்று விக்கெட்டுக்களையும் ஹேரத் 2 விக்கெட்டுக்களையும் குலசேகர, மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 193 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பம் சொதப்பியது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்சான் 9 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 5 ஓட்டங்களை எடுத்து மில்ஸின் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 11 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த தரங்க-சங்கக்கார ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி இலங்கை அணியை மீட்டெடுத்தனர்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 85 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணித் தலைவர் குமார் சங்கக்கார 62 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மஹேல ஜெயவர்த்தன 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 26.5 ஓவர்களில் 119 ஓட்டங்களை எடுத்து மூன்று விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய சமரவீர நிதானமாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

மறுமுனையில் உபுல் தரங்க 76-வது பந்தில் அரைச் சதத்தைக் கடந்து அசத்த இலங்கை அணி 34.4 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது.

இதில் உபுல் தரங்க 109 பந்துகளில்(9 பவுண்டரிகள் உட்பட) 70 ஓட்டங்களை எடுத்து மில்ஸின் பந்து வீச்சில் வோற்லிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் அடுத்துக் களமிறங்கிய மத்யூஸ் பூச்சியத்துடனும் குலசேகர 7, ஹேரத் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 38.3 ஓவர்களில் 180 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து திடீர் சரிவு கண்டது.

எனினும் சமரவீரவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 40.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 195 ஓட்டங்களை எடுத்து மூன்று விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் திலான் சமரவீர 38 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களையும் சாமர கபுகெதர 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் மில்ஸ் 4 விக்கெட்டுக்களையும் சௌத்தி, மக்குலம், ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 4 புள்ளிகளைப் பெற்றது. இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்குத் திருப்புமுனை அமைத்த தரங்க ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.


இத் தொடரின் மூன்றாவது போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் நாளை மறுதினம் மோதுகின்றன.





கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கிளிநொச்சி இரணைமடு, அக்கராயன் குளம், வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு படகுகள், வலைகள் மீன்விற்பனைத் துவிச்சக்கர வண்டிகள், மீன்பெட்டிகள் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் ராஜித சேனாரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உட்பட்ட குழுவினர் அழைத்து வரப்படுவதையும், மீனவர் ஒருவருக்கு உபகரணங்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# மந்திரித்த கூட்டினை கழற்றியதால் மேர்வின் சில்வாவுக்கு வந்த வில்லங்கம்



(கொழும்பு)

பிள்ளை பிறந்தாலென்ன, பாடசாலைக்கு சென்றாலென்ன, நீங்கள் வேலைக்கு சென்றாலென்ன எல்லோரும் என்னுடைய நேரத்திற்கே வேலை செய்யவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கிரிகத்கொட நகரில் நேற்று வெள்ளிக்கிழமை மணிக்கூட்டு கோபுரம் ஒன்றினை திறந்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனக்கு இப்பொழுது நேரம் சரியில்லை. சனிதோஷம் நடக்கிறது. அதற்காக நான் மந்திரித்த கூடு ஒன்றினைப் போட்டிருந்தேன். அண்மையில் அதனை சுழற்றி வைத்துவிட்டேன். அதனால்தான் ஜனாதிபதி என்னை ஒதுக்கி வைத்திருக்கிறார்.

ஆனால் மீண்டும் நான் வருவேன். எனக்கு நேரம் சரியில்லாததுபோல் உங்களுக்கும் இருக்கக்கூடாது. ஆகையினால்தான் சரியான நேரத்தினை தெரிந்துகொள்ள நான் மணிக்கூட்டு கோபுரத்தினை இங்கு அமைத்திருக்கிறேன். இங்கு மட்டுமல்ல என்னுடைய அனைத்து தொகுதிகளிலும் மணிக்கூட்டு கோபுரத்தினை அமைப்பேன்.

இனிமேல் இந்த பிரதேசங்களில் பிள்ளை பிறப்பது முதல் வேலைக்கு செல்பவர்கள் வரை என்னுடைய நேரத்திற்கே இயங்க வேண்டும். எனக்கு நேரம் பிழைத்ததுபோல் உங்களுக்கும் நேரம் பிழைக்கக்கூடாது என்று மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# ஹம்பாந்தோட்டை பெலியத்தையில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் இருவர் சரண்

ஹம்பாந்தோட்டை பெலியத்த பிரதேசத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டோரின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் 4 பேர் சரணடைந்தனர்.

இவர்களை எதிர்வரும் 19 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை நீதவான் கீதானி விஜேசிங்க உத்தரவிட்டுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்களான இவர்கள் சட்டத்தரணிகள் ஊடாக நேற்று பெலியத்த காவல்துறையில் சரணடைந்தனர். (ச-5)

## ஆடைத் தொழிற்சாலை வேலைக்கென

# தெற்குக்கு அழைத்துச்செல்லப்படும் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்கவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்திலிருந்து இளைஞர்,யுவதிகள் தெற்குக்கு அழைத்துச் செல்லப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலில் வேலை தருவதாக பணத்தைப் பெற்றுக்கொள்ளும் குழுவினர் பின்னர் பயிற்சிக்கென அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்பட்டது.

இக்குழுவினரை இளைஞர், யுவதிகள் நம்புகின்ற போதிலும் பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறப்பட்டது.

இவ்வாறு வேலைக்குச் செல்வதற்கென பல இளைஞர் யுவதிகள் பதிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறான சம்பவங்கள் தீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட...

புலிகள் அமைப்பும் ஒழிக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்துள்ள நிலையில் இதுவரையில் ஒரு துப்பாக்கி தோட்டாவின் சத்தமோ குண்டு வெடிப்புக் களோ இடம்பெறவில்லை. இதனால் விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என தான் உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள மக்களின் காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளது. அரசினால் தமிழ் மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளை அவர்களிடமே மீள கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளும் இடம் பெயர்ந்த மக்களும் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் தலைவர் குமரன் பத்மநாதனுக்கு (கே.பி.) அரசாங்கம் காட்டும் மன்னிப்பும் கே.பியை நடத்தும் முறையும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

கே.பி.யிலும் அவரின் ஆதரவாளர்களிலும் அரசாங்கம் தங்கியுள்ளது. இலங்கையின் அபிவிருத்திக்காக அவர் முதலீடு செய்யப் போவதாகக் கூறப்படும் பணம் சட்டவிரோதமான பாவக் காரியமான முறையில் திரட்டப்பட்டதாகும். அப்பணத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதன் மூலம் மேற்படி பாவத்தில் இந்நாடு பங்குவகிக்கவேண்டுமெனநான்எண்ணவில்லை.

யாழ். மாவட்டத்திலுள்ள மக்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வி.ஆனந்தசங்கரி தனது சாட்சியத்தில் மேலும் கூறியுள்ளார். (ச-5)

# ஐ.நா. சபையுடன் இணங்கிச்...

கொள்ள ஆரம்பித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவுக்கு சர்வதேச ரீதியான ஆதரவுகள் வலுப்பட ஆரம் பித்துள்ளமையை அடுத்து அரசாங்கம் ராஜதந்திரரீதியாக தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் விரைவில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித்த கோஹன்ன இலங்கைக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொது கூட்ட அமர்பில் கலந்து கொள்வது தொடர்பில் ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாத பட்சத்தில் அது இலங்கை அரசாங்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையில் சிக்கல் ஏற்படலாம் என்ற நிலை காணப்படுகிறது.

எனினும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பட்சத்தில் ஜனாதிபதி ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த நிலையில் தொடர்ந்து பல்வேறு ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்ற அதேவேளை எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதன் ஊடாக இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்ற கருத்துக்கு இலங்கை அரசாங்கம் வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (ச-5)

# காணாமல் போனவர்களுக்...

அதேவேளை மரண அத்தாட்சிப்பத்திரம், பிறப்புச்சான்றிதழ், திருமண அத்தாட்சிப்பத்திரம் போன்றவற்றை வழங்கும் பணிகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் கடவுச்சீட்டு அல்லது அதற்கு நிகரான ஆவணங்களைப்பெற்றுக் கொள்ளும் போது பிறப்பத்தாட்சிப்பத்திரம் தேவைப்படாது எனவும் தகவல்கள் மாத்திரமே தேவைப்படும் எனவும் அய்யர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலை திட்டத்தினால் வாதுவயில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த நாடாளுமன்ற செய்தியாளர்களுக்கான செயலமர்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். (ச-5)

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா...

வுள்ளேன். நான் இலங்கையில் அமைச்சராக இருப்பதனால் என்மீதான தேடப்படும் குற்றவாளி என்ற உத்தரவை ரத்து செய்ய வேண்டும்.

என்மீதான வழக்குகளை கைவிட வேண்டும். எந்த விசாரணைக்கும் நான் ஒத்துழைக்கத்தயாராகவுள்ளேன் என்று டக்ளஸ் தேவானந்தா அந்த மனுவில் கூறியுள்ளார். இந்த மனு நீதிபதி சீ.டி.செல்வம் முன்னிலையில் விசாரணைக்கு வரவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் மீதான குற்றச்சாட்டுக்களில் இரண்டு வழக்குகள் 1987 இந்தியா-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு பதிவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அரசு மரியாதையளிக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

அப்போது தேடப்படும் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்யக்கோரி தமிழக மக்கள் உரிமைகள் அமைப்பின் செயலாளரும் வழக்கறிஞருமான புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சென்னையில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் அவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் அவர் சாதாரணமாக இந்தியா செல்வது சட்டவிரோதமாகும். (ச-3,5)

# ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்...

வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை அரசாங்கம் காத்திரமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக இழக்கப்படவில்லை என ஒன்றியத்திற்கான இலங்கை பிரதிநிதி பெர்ணாட் சாவெஜ் தெரிவித்துள்ளார்.

சலுகைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டதன் பின்னரும் இலங்கைப் பேச்சுவார்த்தைகளை தொடர முடியும். பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் என்னும் மூடப்படவில்லை.

மனித உரிமை, ஊடக சுதந்திரம் உள்ளிட்ட 15 நிபந்தனைகளை பூர்த்திசெய்தால் இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை தொடர்ச்சியாக வழங்க முடியும் என ஐரோப்பிய ஒன்றியம் காலக்கெடு விதித்திருந்தது.

எவ்வாறெனினும் இந்தக் கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## உடன் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரூடியோ ஒன்றுக்கு Photoshop, Video Editing தெரிந்தவர்கள் உடன் தேவை. இருபாலாரும் நேரில் வரவும்.

அரவிந் ஸ்ரூடியோ

309, நாவலர் வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0777162339

இ


# 'சரத் பொன்சேகா குற்றவாளி...

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன் றத்தில் நடந்த முதல் வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியாக இருந்தபோதே அவர் அரசியலில் ஈடுபட்டார் என்று அவர் மீது இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தண்டனையாக, ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் சரத் பொன்சேகாவின் பதக்கங்களைப்பறித்து அவரது பெயருக்கு முன்னாள் உள்ள ஜெனரல் என்ற இராணுவ அந்தஸ்து படிநிலையும் பறிக்கப்படவுள்ளதாக உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போரில் இராணுவத்தினர் பெற்ற வெற்றியில் முக்கிய பங்காற்றியவர் சரத் பொன்சேகா.

ஆனால் அந்த வெற்றிக்குப்பின்னர் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இவருக்குத் தகராறு ஏற்பட்டது. பின்னர் ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு சரத் பொன்சேகா தோல்வியடைந்தார்.

தற்போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வேறு குற்றச்சாட்டுக்களுடன் இராணுவ நீதிமன்றத்தில் வேறொரு வழக்கும் சிவில் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகளும் நிலுவையிலிருந்து வருகின்றன.

சரத் பொன்சேகாவுக்கு சார்பாக வழக்கறிஞர்கள் வாதிட முன்பதாகவே இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சிகளை பதிவு செய்யும் பணிகள் நேற்று முன்தினத்துடன் முடிபடைந்ததாக இராணுவ ஊடகப் பணிப்பாளர் சபையின் கேணல் துமிந்த கமகே தெரிவித்துள்ளார்.

நான்காவது சாட்சியாளராக மேஜர் ஜெனரல் நிஷாந்த சில்வா நேற்றுமுன்தினம் சாட்சியமளித்துள்ளார்.

பொன்சேகா இராணுவ சேவையிலிருந்தபோது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதலாவது இராணுவ நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

மேஜர்ஜெனரல் எச்.எல்.வீரதுங்க தலைமையிலான இந்த இராணுவ நீதிமன்றத்தில், மேஜர்ஜெனரல்களான ஏ.எல்.ஆர்.விஜதுங்க, பீ.ஆர்.ஏ.பீ.ஜயதிலக்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த மூவரடங்கிய நீதிபதிகள் தலைமையில் முதலாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் முற்பகல் 9.30க்கு கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. (ச-3,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.